# உதயம்


நிறுவியவர் :
**கன்னிக்கண்ணன்**

ஆசிரியை :
**சகுந்தலா கிருஷ்ணன்**

ஒளி-10 | டிசம்பர் - 64 | கதிர்-8

ஒப்பிலாக் கலைமணியே! —தலையங்கம் 1
பசி வந்திடப் பத்தும் பறந்து போம்! —அக்கம் பக்கம் 3
அமரர் நேரு! —இளந்திரையன் 6
போக யோகி! —தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் 9
காமராஜ் வளர்த்த செடி —அட்டைப்பட விளக்கம் 11
திலகம்—மதுரை மூவேந்தன் 12
நடைப் பிணம் —கு. சண்முகசுந்தரம் 15
பாசம் பொல்லாதது —நீலா ராமமூர்த்தி 19
ஏறு, மேலே ஏறு! —எ.மு. 22
கூற்று ஒன்று அல்ல ஒரு கோடி —சித்திரை 23
அனிச்சப்பூ -எழில்முதல்வன் 25

'உதயத்'தில் வெளியாகும் கதை, கட்டுரை, கவிதைகளில் வரும் பெயர்கள் அனைத்தும் கற்பனையே. எவரையும் குறிப்பிடுவன அல்ல.



# ஒப்பிலாக் கலைமணியே!

மன்னுயிர் காத்த மன்னன் என்றால், அது மாமன்னன் அசோகனைக் குறிக்கும். வீர விஜயன் என்றால் அது சத்ரபதி சிவாஜியைத்தான் குறிப்பிடும். உலகில் மகான்கள் எத்தனையோ பேர் இருப்பினும் மகாத்மா என்றால் அது காந்தியடிகளை மட்டும்தான் சுட்டும். முடிசூடாத மன்னன் என்றால் சோஷலிச ஜனநாயக வீரர் நேருஜிதான் உலகத்தின் கண்முன்னால் நிற்கிறார். தமிழ்ப் பெருமக்களை உய்வித்த அண்ணல் என்றால், நம் கண்முன்னே தலைவர் காமராஜரின் உருவம்தான் தெரிகிறது.

அதேபோல, சினிமா என்றாலும், திரை உலகம் என்றாலும், மகிழ்ச்சிப் பொழுதுபோக்கு என்றாலும் அனைவர்

மனத்திலும் கொலு இருப்பவர் நடிகர் திலகம் சிவாஜி கணேசனே ஆவார்.

பாரதத் தாய்க்கு எத்தனையோ அருந்தவப் புதல்வர்கள். கலைத்துறையிலே அந்த அன்னையின் அருமைப் பிள்ளை நமது சிவாஜி.

நடிகர் திலகம் அவர்கள் நடிப்புத்துறையிலே அடியும் முடியும் கண்டவர். அவர் தாங்காத பாத்திரம் இல்லை. அவர் தாங்கிய பாத்திரம் ஒவ்வொன்றும், காவியம் உயிர்பெற்றது போல பொன்னுக மணியாக ஒளிர்கின்றது.

*கலை உலகத்திலே பல அரிய உத்திகளைப் பிறப்பித்து, பல அரிய உணர்ச்சி நுட்பங்களுக்கு வடிவம் கொடுத்து, பாவனைகளில் அனந்த கோடி படிமங்களைச் சிருஷ்டித்த கலைப் பிரம்மா இவர் !*

இந்தியாவும் தமிழகமும் எத்தனையோ துறைகளில் உலகுக்கு வழிகாட்டியாக, முன்னணியாக நிற்கின்றன. நடிப்புத் துறையில் இந்த இரண்டு தாய்மார்களுக்கும் ஒப்பற்ற ஸ்தானம் தேடித்தந்தவர் இந்தக் கலைமன்னன்.

வீரபாண்டியக் கட்டபொம்மன், செக்கிழுத்த தியாகி சிதம்பரனுர் போன்ற விடுதலை விரர்கள் தமிழக மக்களின் நெஞ்சில் உயிர்பெற்ற உருவமாக நிலவும்படி, புதியதோர் திரையுலகம் தோற்றுவித்தவர் சிவாஜி. இராமாயண காலத்துப் பரதனை, இருபதாம் நூற்ருண்டு மக்கள் முன்னிலையில் கொண்டுவந்து வைத்தவர். வீர சிவாஜியாக, தந்தை பெரியாராக, ராஜதந்திரி சாணக்கியனுக, இன்னும் எத்தனையோ சீரிய சரித்திரங்களை அவர் படைக்கத்தான் போகிருர்.

கலைத்துறையிலே மட்டுமல்ல, மனிதாபிமானம் கொண்ட மனிதன் என்ற முறையிலும், நட்புக்கு உரியவர் என்ற வகையிலும் சிறந்த பண்பாளராக விளங்குகிருர். பொருள் திரட்டுவதில் உள்ள வல்லமை போலவே, பொருளை நல்ல காரியங்களுக்குச் செலவிடும் உள்ளம் கொண்டவர். அவசியமான நல்ல பணிகளுக்கு அள்ளிக் கொடுக்கும் பெருந்தகையாளர்.

சிவாஜி கணேசன் நூறு படங்கள் நடித்து முடித்து விட்ட நிகழ்ச்சியை இந்த நாடு விழாவாகக் கொண்டாடுகிறது. அந்தக் கலைமன்னன் மேலும் பல அரிய கலைப் படைப்புகளைத் தந்து, பாரதநாடு என்றென்றும் போற்றத் தக்க கலைமணியாக சுடர்விட்டு ஒளிர்வாராக.

'பராசக்தி'யின் அருளால் மக்கள் தந்த 'மனோகர'மான நடிகர் திலகம் என்ற பட்டத்தைப் பெற்று, தான் கடந்து வந்த பழைய பாதையைத் 'திரும்பிப் பார்த்து, இருக்கும் தவறுகளைத் திருத்தி, நவரசங்களையும் நவராத்திரி காலத்தில் நடிக்கக் கூடிய திறமையைப் பெற்று, பட உலகிலேயே 'புதிய பறவை'யைப் போல திரிந்து, 'படிக்காதமேதை'யாய் அமெரிக்கா சென்று திரும்பி, 'புதையல்' போல் மறைந்துள்ள தம் நடிப்புத்திறமையை வெளிப்படுத்தி, 'பார்த்தால் பசி தீரும்' அளவுக்கு நடிப்பு விருந்தைப் பாலும் பழமும் போல் படைத்து 'பணம்' சேர்ந்திருந்தாலும் செருக்கில்லாமல், 'தெனுலிராமன்' கூத்தடிக்காமல், மக்கள் கொடுத்த செல்வத்தை மக்களுக்கே வாரியிறைத்து, வள்ளல் என்ற பட்டம் பெற்று, வளர்ந்துகொண்டே வரும் இந்த குணச் சித்திர நடிகர் முடிவில்லாத இமயத்தின் சிகரம் போல் வளரட்டும், வாழட்டும் !

சிவாஜியின் சாதனையைப் போற்றும் மலர் ஒன்று அழகான முறையில் தயாரிக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அம்முயற்சி வெற்றி பெற எல்லா வகையிலும் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டுகிருேம்.

வாழ்க சிவாஜி !

வளர்க கலைகள் !

# அக்கம் பக்கம்

மழை, மாதம் மும்மாரிக்கும் மேல் பெய்கிறது. வேளாண்மை நன்றாக விளைந்திருக்கிறது. உற்பத்தி ஒன்றுக்கு ஒன்றரை மடக்கு பெருகியிருக்கிறது. சென்ற 10 ஆண்டுகளில் ஜனத்தொகை கொஞ்சம் ஏறியிருக்கிறது என்றாலும், உற்பத்திப் பெருக்கத்தை சாப்பிட்டுவிடும் அளவுக்கு ஏறிவிடவில்லை.

## பசிவந்திட பத்தும் பறந்துபோம்!

*நாட்டை* ஆள்பவர்க்கு அஞ்சாமை, துணிவுடைமை ஆகிய இரண்டு பண்புகளையும் வற்புறுத்துகிறார் வள்ளுவர்.

தற்சமயம் நாட்டில் அஞ்சாமை, துணிவு இரண்டும் நிரம்பத் தேவை.

உணவுப் பிரச்னை இப்போது அபாய உருவம் எடுத்திருக்கிறது.

விலைவாசி ஏற்றமானது நெளியும் பாம்பைப் போல திகில் அளிக்கிறதே என்று அறிஞர் கருதினர்.

ஓடுகிற பாம்பின் வாலை இழுத்த கதையாக, விலை நிர்ணயம் செய்தார்கள் நெல், அரிசிக்கு.

*சாமர்த்தியசாலிகள்,* துணிந்தவர்கள் ஓடுகிற பாம்பின் வாலை எடுத்து, பாம்பைச் சுழற்றி பூமியில் அறைந்து கொன்றுவிடுகிறார்கள். நழுவும் மீனைப் பிடிக்கிற மாதிரி பாம்பைக் கூடையில் போட்டு மடக்கிவிடுபவர்களும் உண்டு. பின்னால் அந்தப் பாம்பின் பல்லைப் பிடுங்கிவிட்டு, அதை ஏறக்குறைய வேடிக்கைப் பொருளாக்கிவிடுவார்கள்.

அரசாங்கம் செய்தகாரியம் இந்த இரண்டு வழியிலும் அடங்கவில்லை. ஓடுகிற பாம்பை பயந்தவன் தொட்ட கதைபோல, காரியம் கெட்டுவிட்டது.

இன்று பாம்பு படமெடுத்துக் கொண்டு சீறுகிறது. அதற்குத் தீண்டவும் பயம். ஓடவும் பயம். எதிரில் நின்றிருப்பவன் நிலையும் அப்படியே. இதன் விளைவுதான் நெருக்கடி; சங்கடம்; பஞ்சம்.

### பொருள் இருந்தும் பஞ்சம்!

பஞ்சம் என்றால் இது சாதாரண பஞ்சமல்ல. இல்லாமையால் வந்த பஞ்சமல்ல. கேடும் பஞ்சம் இது, பொருள் இருந்தும் வந்திருக்கும் பஞ்சம் இது.

தமிழகம் சாதாரணமாகவே கிட்டத் தட்ட சுய தேவைப் பூர்த்தி நிலைமை உள்ள மாநிலமாகும். நல்ல மழை பெய்யும் ஆண்டுகளில் இங்கு தானிய உற்பத்தி உபரியாகவே இருக்கிறது. இங்கிருந்து ஏற்றுமதியாகிறது. அந்த அளவுக்கு ஏறத் தாழ, ஆந்திர அரிசி இங்கு வருகிறது.

நியாயமாகப் பார்த்தால் இங்கு பற்றுக் குறைக்கு இடமில்லை. பஞ்சம் ஏற்படக் காரணம் இல்லை.

### லாப நோக்கம் தவறு!

வியாபாரிகளின் பேராசையால்தான் செயற்கையான ஒருபஞ்ச நிலைமை ஏற்படுத்தப் பட்டிருக்கிறது என்று கூறுவதில் பொருள் உண்டு. அதில் உண்மை உண்டு.

அவர்களுக்கு லாப ஆசை இருப்பது இயற்கை. லாப ஆசை கொள்வதில் தப்பும் இல்லை. அவர்கள் ஜீவனோபாயத்துக்கு அரசாங்கமா சம்பளம் கொடுக்கிறார்கள்?

வியாபாரிகள் வேலை செய்வதில் காலம் நேரம் கிடையாது. காலை 8 மணி முதல் இரவு 9-30 வரை கடை வியாபாரத்தை கவனிப்பவர்கள் இங்கே சர்வ சகஜம். சொந்த சுகத்தைத் துறந்து அவர்கள் வேலை செய்கிறார்கள். மதி நுட்பத்தோடு எதை எந்தச் சமயத்தில் வாங்கி வைத்து எப்போது விற்றால் லாபமடையலாம் என்று அனுமானித்து, கணக்குப் போட்டு காரியமாற்றுகிறார்கள். பொருளை முன் கூட்டியே வாங்கி வைத்தால் அதற்கு வட்டி உண்டு. பராமரிப்புச் செலவு உண்டு. வாடகை உண்டு.

இதை யெல்லாம் கழித்துப் பார்த்தால் அவர்களுக்கு கொள்ளைலாபம் எதுவும் வந்துவிடாது.

அரசாங்க அதிகாரிகள் பொறுப்பில் வாங்கப்பட்டு இடங்கில் வைக்கப்படும் சரக்குகள் பெருமளவுக்கு சேத மடைந்துவிடுகின்றன. அங்கெல்லாம் கொள்ளை நஷ்டம் ஏற்படுகிறது.

வியாபாரிகளின் கொள்ளை லாபத்தால் மக்களுக்கு எப்படி கஷ்டம் உண்டோ, அதே போல சர்க்கார் அதிகாரிகளின் நஷ்ட வியாபாரத்தாலும் பொதுமக்களுக்கு கஷ்டம் உண்டு. ஏனெனில் அதிகாரிகள் செலவாக்கும் பணம் மக்களின் பணம்.

அரசாங்கமே தானிய வியாபாரத்தை மேற்கொள்ளக் கூடாது என்பது நம் கட்சியல்ல. மேற்கொள்ளலாம். ஆனால் அளவாக கணக்காக நஷ்டம் வராமல் மேற்கொள்ள வேண்டும். தங்களால் முடியாத காரியத்தை விட்டுவிட வேண்டும்.

எல்லா மக்களுக்கும் அரசாங்கமே தானியம் வாங்கி வினியோகம் செய்வதென்பது தற்போதைய அமைப்பில் நடக்காத சங்கதி. கம்யூனிச அமைப்பில் அது சாத்தியமாகலாம். நம் நாடு கம்யூனிஸ்ட் நாடல்ல.

*ஏழை வாழ வழி !*

பூரா தானிய வியபாரத்தையும் வியாபாரிகளிடமே விட்டு விட்டால், ஏழைகளுக்கு நியாய விலையில் அரிசி கிடைக்காமல் போகக் கூடும். அரசாங்கம் இப்படி அஞ்சுவதில் அர்த்தம் உண்டு. ஏழைகளுக்கு நியாயவிலை தானியம் கிடைக்கவேண்டும். அதே சமயத்தில் சுதந்திர மார்க்கெட்டில் அரிசி தாராளமாக விற்கவேண்டும்.

ஏழைகளுக்காக நியாயவிலைக் கடைகள் நடத்தலாம். மற்றபடி சுதந்திரமான அரிசி வியாபாரத்தை அனுமதிக்கலாம். இப்படிச் செய்தால் இந்த செயற்கைப் பஞ்சம் நீங்கி விடும்.

அரசாங்கத்துக்கு மிகுந்த பணிவுடன் ஒன்று சொல்லிக் கொள்ளுகிறோம்.

ஒரு நாளுக்கு ஒரு நபருக்கு 4 அவுன்ஸ் என்ற அளவில் வாரத்துக்கு அரைப்படி அரிசி கொடுப்பது என்பது அவமானம். சுதந்திர நாட்டில், அதுவும் விவசாய நாட்டில், பாட்டாளிகள் மிகுந்த நாட்டில் ஒரு இழுக்கு.

பாட்டாளிகளுக்கு இந்த அளவு அரிசி என்பது, ஒரு வார ரேஷன், ஒரு நாளைக்குத் தான் காணும். ஒரு நாள் உணவை 7 நாட்களுக்குப் பகிர்ந்து உண்டால் வயிறு வற்றி விடும். ஆரோக்கியம் பாதிக்கப்படும். வலிமை குன்றி விடும்.

அரிசி என்பதே சத்துக்குறைவான உணவு. இதைக்கூட வயிறு நிறைய கொட்டிக் கொள்ளக் கூடாதா ? இப்படி இல்லாத பஞ்சம் எதுவும் வந்துவிட வில்லையே. இருப்பில் கோளாறு இல்லை; சப்ளையில்தான் கோளாறு என்பது எல்லோருக்குமே தெளிவாகத் தெரிகிறது.

இந்தக் கோளாறை முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் துணிந்து நீக்க வேண்டும்.

இந்தச் சமயத்தில் தத்துவம் பார்க்காதீர்கள். கௌரவம் பார்க்காதீர்கள். மேல் மட்டம் கீழ் மட்டம் பார்க்காதீர்கள். பசித்த வயிற்றில் முறுக்கிக் கொண்டு கிடக்கும் நரம்புகளின் இழுப்பை உணர்ந்து பாருங்கள். அதன் படி செயல்படுங்கள் என்றுதான் வேண்டிக் கொள்ளுகிறோம்.

பசி வந்தால் பத்தும் பறந்துபோம் என்பது பழமொழி. ஜனநாயக சகாப்தத்தில், அந்தப் பசி வேறு எதையும் பட்டமாகப் பறக்கச் செய்துவிடும் என்பதையும் பணிவுடன் குறிப்பிட விரும்புகிறோம்.

# நர்ஸ் தேர்வா ? ஜாதி ஆராய்ச்சியா ?

இந்தியா ஒரு இதம் தரும் சுதந்திர நாடு. ஜாதிமத சார்பற்ற மக்கள் குடியரசு, ஜனநாயக சோஷலிஸத் திருநாடு என்பது ஊரும், உலகமும் அறிந்த பேருண்மை. இதை எவரும் மறக்கவோ மறைக்கவோ முடியாது.

ஆனால் இப்படி ஒரு ஒப்புயர்வற்ற சுதந்திர ஜனநாயக சோஷலிஸத் திருநாட்டை அமைத்து க்ஷேமநல ஆட்சி நடத்தும் காங்கிரஸ் ஆட்சியில் ஒரு சில புல்லுருவிகள் அதிகாரிகளாக வீற்றிருப்பது மிகவும் வருத்தத் தக்கதும்; அருவருக்கத் தக்கதும் ஆகும்.

ஜாதியின் பெயரையோ, மதத்தின் பெயரையோ குறிப்பிட்டு இழிவு படுத்த நினைக்கும் சில அகம்பாவிகள் இன்று அதிகாரிகளாக வீற்றிருப்பது தமிழகத்தின் ஒரு சாபத்தீடாகும்.

நர்ஸ் தேர்வுக்காக கே. சரஸ்வதி என்ற ஒரு இளம் பெண்மணி சென்ற 19—11—64 அன்று தேர்வுக்கமிட்டி முன் பேட்டிக்கு சென்றிருந்த போது அந்தக் கம்மிட்டியின் உறுப்பினர்களில் ஒருவரான ஒரு உயர்தர மருத்துவ அதிகாரி தம்மை, மிக உயர்ந்த, உத்தம உயர் ஜாதியைச் சார்ந்தவர் என்று நினைத்துக்கொண்டு அந்தப் பெண்மணி

யிடம் கேடட கேள்வி அம்புகள் நம் இதயத்தைக் குத்தி "நாம் இன்று ஒருமத சார்பற்ற ஜனநாயக சோஷலிஸ மக்கள் குடியரசில் இருக்கிறோமா அல்லது ஒரு உயர் ஜாதி வர்க்கத்தின் யதேச்சாதிகரர ஆட்சியில் இருக்கிறோமா என்ற சந்தேகத்தை கிளறிவிட்டு விட்டது. அவர் கேட்ட வினாக்கணைகள் தான் என்ன !

"உனக்கு எந்த ஊர்? உன் ஜாதி என்ன?" என்று மருத்துவ அதிகாரி கேட்டார்.

"என் ஊர் திருநெல்வேலி. நான் மறவர் குலத்தைச் சேர்ந்தவள் என்றாள் அந்த பெண்மணி.

மறவரா ? மறவர்கள் எல்லாம்திருடர்கள் தானே ? என்று மேலும் அதிகாரி கேட்டார்.

"அப்படி ஒன்றும் இல்லை." (அந்நப் பெண் பயந்து பதறிக்கொண்டே சொன்னாள்).

"சரி, சரி நீ படித்தவள். நீ திருட, திருட மாட்டாய், போய்வா என்று சொல்லி அனுப்பி விட்டார்" அந்த அதிகாரி.

நர்சு தேர்வுக்காக பேட்டிகாண வந்த அந்த சரஸ்வதி என்ற பெண்மணியிடம் அந்த ஆணவம் பிடித்த அதிகாரி 'இண்டர்வியூ' என்ற பெயரில் கேட்ட கேள்விகள் தான் மேலே காண்பவை.

நர்ஸ் வேலைக்கும் இந்த இனத்துக்கும் என்ன் சம்பந்தம் ? எதற்காக இப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்கவேண்டும் ? அதுவும் ஒரு இளம் பெண்மணியிடம். இதுதான் நமக்கும் புரியவில்லை;

ஒரு மக்கள் குடியரசு அதுவும் ஜாதிமத இன சார்பற்ற ஒரு ஜனநாயக சோஷலிச நாட்டின் அதிகாரி ஒருவர் கேட்கும் கேள்வியின் ஆணவப்போக்கும் அகம்பாவ வெறியையும் என்னவென்று சொல்வது ?

மறவர் சமூகம் என்பது 'முக்குலத்தோர்' என்ற மூத்தபெருங் குடிமக்களின் ஒரு உட்பிரவைச்சார்ந்தது, அன்னியன் நம்மை அடக்கி ஆண்டபோது வீறுகொண்டெழுந்த ஒரு வீர பரம்பரை என்றுகூட அதைச் சொல்லலாம். எந்தப் பட்டம் பதவிகளையும் காட்டி அடக்கி ஒடுக்க முடியாத ஒரு சமூகம் 'மறவர்' சமூகம் என்பதைக்கண்டு கொண்ட வெள்ளை அரசு அவர்களை 'குற்ற பரம்பரை' என்ற ஒரு பழியைச் சுமத்தி அடக்கி ஒடுக்க முற்பட்டது என்பது சரித்திரம் கூறும்சான்று. சுதந்திரப்போராட்ட காலத்தில் காங்கிரஸ் கட்சி இந்த பாவப்.பெயரை மாற்ற வெள்ளை அரசாங்கத்தோடுப் போராடி வெற்றியும் பெற்றுத் தந்தது.

இதை தங்கள் ஜாதி வெறிக்கு ஒரு ஆதாரமாக வைத்துக்கொண்டு ஒருசில 'உயர்ஜாதி' அதிகாரிகள் இண்டர்வியூவுக்கும் வரும் இளம் நெஞ்சங்களில் ஒரு களங்கத்தையும், கலக்கத்தையும் உண்டு பண்ணும்படியான கேள்விகளை கேட்கிறார்கள்-கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள். ஜாதியைப் பேசக் கூடாது, சமூகத்தை பழிக்கக்கூடாது என்று சட்டம் செய்து சமநீதி அரசு நடக்கும் இந்த நாட்டில் இப்படிப் பட்ட மனித சமூதாய விரோதிகளை நம் ஆட்சியில் நாம் அதிகாரிகளாக வைத்து வைக்கலாமா?

இவர்கள் யார், எங்கிருந்து வந்தார்கள் ? இவர்கள் பூர்வீகம் என்ன என்று இந்த மூத்த பெருங்குடி மக்கள் ஆராயத் தொடங்கினால் ஜாதி வெறியைத் தூண்டும் இந்த அதிகாரிகளின் நிலைமை என்னவாகும் ? எனவே இவ்விதம் ஜாதி வெறியைத் தூண்டிவிட்டு ஒரு பெரும் புரட்சிக்கு வழி வகுக்காமல் இருக்கும்படி இந்தமாதிரி அதிகாரிகளை எச்சரிக்கிறோம்,

இம்மாதிரி ஜாதிவெறியைத் தூண்டும் வண்ணம் மற்ற பின் தங்கிய சமூகத்தின் பண்பட்ட உள்ளங்களை புண்பட வைத்தால் அதன் எதிரொலி என்னவாக இருக்கும் என்பதையும் தயவு செய்து சிந்தித்து பார்க்க வேண்டுகிறோம்.

இந்த சம்பவத்தின் உண்மை என்ன? எந்த அதிகாரி இப்படி அந்த பெண்ணின் சமூகத்தைப் பழித்து கேள்வி கேட்டது? ஆகியவற்றை உடனடியாக அரசினர் விசாரித்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுகிறோம்.

# பணம் திரட்ட ஒரு திட்டம்!

முதலாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தமிழ்நாட்டில் அணைகள் கட்டப்பட்டன. பாசன வசதிகள் பெருக்கப்பட்டன.

இரண்டாவது திட்டக் காலத்தில் கிராமங்கள் பரவலாக மின்சார வசதி பெற்றன.

மூன்றும் திட்டக்காலத்தில் கல்வி வளர்ச்சியை முக்கியமாகக் குறிப்பிடலாம்.

ஆனால் திட்டங்கள் மூலம் நாட்டில் செல்வம் பெருகி மக்கள் வாழ்வு வளம் பெற்று, கையில் காசு பணம் சேர வேண்டுமானால், தொழில்கள், சிறு தொழில்கள், கைத்தொழில்கள் பெருக வேண்டும்.

நாலாவது திட்ட காலத்திலாவது அதற்குப் போதுமான வசதி செய்யப்பட வேண்டும்.

பஞ்சாயத்து தலைவர்களே, பஞ்சாயத்து பெருமன்றத் தலைவர்களே, உங்கள் பகுதியில் தொழில் வளர்ச்சிக்கு என்ன திட்டத்தை சிபாரிசு செய்யப் போகிறீர்கள்? எந்த அளவில் அதில் ஒத்துழைப்பீர்கள்.

இவ்விஷயமாக அருள் கூர்ந்து சிந்திப்பீர்களாக?



# அமரர் நேரு

குறிஞ்சி. இளந்திரையன்

❋

ஆங்கில ஆட்சி யின்கீழ்
அடங்கிய இந்தி யாவை
வாங்கியே தீர்வே னென்று
வகையுடன் ஒன்று கூட்டி,
தூங்கிடும் மக்கள் காண
துயர்நிலை உரைத்த தாலே
ஏங்கியே சிறைப்பட் டாலும்
எழிலுடை ஆட்சி கண்டார்.

பறங்கிய ராட்சி எங்கும்
பாரத பூமி தன்னில்,
உறங்கிடச் செய்த வீரன்
ஒப்பிலா வள்ளல் நேரு,
அறத்துடன் அன்பு கொண்டே
ஆண்மையோ டாண்டு வந்த,
திறமதை உலகம் கண்டு
திகைப்பினை அடைந்ததம்மா!

இந்திய நாடுவாழ
எட்டிரண் டாண்டு காலம்
வெந்துயர் பலவும் எய்தி
வெற்றியின் மடியில் நின்று
மந்திரி பலரைக் கொண்டே
மாண்புடன் ஆட்சி செய்த
தந்தையே யனைய நேரு
தகைமையை யென்ன என்பேன்.

பஞ்சநல் சீலக் கொள்கை
பாரினுக் களித்த செம்மல்
கொஞ்சுநல் மொழியில் எங்கும்
குழந்தை ''பேரறிஞர் யாரும்,''
நெஞ்சமே மகிழ்ந்து நின்று
நேருவின் பெருமை பேசி
தஞ்சமே தஞ்ச மென்றத்
தலைவனை வணங்கி நிற்பர்.


இமைய முகட்டி ருந்து
இறைக்கெலாம் அருளை ஈனும்,
உமையவள் காதற் றலைவன்
ஓங்குசீர் சிவனே போல
அமைதியில் அமைதி யென்றே
அனைவர்க் கும்கூறி இங்கே,
நமையெலாம் ஆண்டு நின்ற
நம்பியாம் நேரு வாழ்க!


சாதியை அழித்தொ ழித்து
சமயத்தைப் போக்க எண்ணி
ஆதி முதல் பாடுபட்ட
அரும்பெரும் கொள்கைக் குன்றை
பாதியில் கொன்று போட்ட
பாதகக் காலன் இன்று
நீதியில் தவறி விட்டான்
நெறியிலாக் கள்வன் தானே.

உத்தமக் காந்தி சொன்ன
ஓங்குயர் நெறியில் நின்று
''சத்தியாக் கிரகம்'' செய்து
தாயகம் மீட்டுத் தந்த
சித்தமே தெளிந்த நேரு
தீக்கிரை யான போது,
அத்தனை மக்கள் உயிரும்
அல்லல்பட் டுழந்த தம்மா!

பன்னீரில் குளித்தெ ழுந்த
பாரதத் தலைவன் சாவு
கண்ணீரில் மக்கள் எல்லாம்
கரைந்திடச் செய்த காட்சி
மண்ணீர்மை உள்ள மட்டும்
மறைந்திடக் கூடுமாமே!
தண்ணீர்மை குன்று அண்ணல்
தவித்திடச் சென்றுன் அந்தோ!

பன்மீன்கள் வானின் மீது
பலப்பல இருந்த போதும்
வெண்ணிலா இல்லாப் போது
வியனற்றக் காட்சி போல
பெண்மையின் உயர்வு காண
உண்மையாய் உழைத்த நேரு
அண்மையில் சென்ற தாலே
அழகினை இழந்த தம்மா!





சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் பொது மக்கள் தொடர்பு பிரிவை சென்ற மாதம் 13-ம் தேதி மத்திய துணை அமைச்சர் திரு. சி. ஆர். பட்டாபிராமன் துவக்கிவைத்தபோது எடுத்த படம். போலீஸ் துறையின் புதிய சகாப்தத் தலைவர் ஐ. ஜி எப். வி. அருள் இவ்விழாவுக்குத் தலைமை வகித்தார். போலீசாரை பொதுமக்களோடு சகஜமாக தொடர்புகொள்ளச் செய்யும் இப்பிரிவை அமைத்த கமிஷனர் எம். சிங்காரவேலர் அவர்களுக்கு நம் பாராட்டு.

# போகயோகி

—தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், ஐ.ஏ.எஸ். (ஓய்வு)—



சித்தகல்ப சிரோன்மணி தவத்திரு பொன்னையா சுவாமிகள் இந்திய ஞானிகளில் ஒருவர். அவர் பிறந்து, வாழ்ந்து, வழி காட்டி, மறைந்த முறையே ஒரு தனித்தன்மை வாய்ந்தது. அதை ஒரு மாயை என்று சொல்வதா? அல்லது தெய்வீக அவதாரங்களின் லீலை என்று சொல்வதா? அது புரியாத புதிர்—மனிதர்களுக்கு! அவரை யொத்த ஞானிகளுக்கு ஒருக்கால் தெரிந்திருக்குமோ என்னமோ நாமறியோம். இந்த அமரப் பெரு மகனாரின் நினைவு நாளை இந்த மாதம் 18-ம் தேதி கரிவலம் வந்த நல்லூரில் திருவிழாவாக கொண்டாடுகிறார்கள். இதையொட்டி இக்கட்டுரையை இங்கே பிரசுரிப்பதில் பெருமை அடைகிறோம்!

—ஆசிரியர்.

மன்றலின் வந்து மணித் தவிசுஏறி
வென்றிநெடுந்தகை வீரனும் ஆர்வத்து
இன்துணை அன்னமும் எய்தி இருந்தார்.
ஒன்றிய போகமும் யோகமும் ஒத்தே

என்று கவிச்சக்ரவர்த்தி கம்பன் ராமனும் சீதையும் மணக்கோலத்தில் இருப்பதை நினைந்து பாடுகிறார். இப்படி இருவரும் போகமும் யோகமும் ஒன்றிய நிலையில் இருந்தார்கள் என்று சொல்வது பொருந்துமா? என்றெல்லாம் நமக்கு ஒரு சந்தேகம் எழும். இது போலவே யோகம் போகம் இவற்றின் உண்மைகளைக் குறித்து ஒருசந்தேகத்தைக் கிளப்பியிருக்கிறாள் அன்னை பார்வதி. கேள்வியைத் தன் கணவனிடமே கேட்டிருக்கிறாள். அதற்கு விடையாக சிவபெருமான் அன்னையிடம், "நீ பூலோகத்தில் ஞானத்தலத்தை அடைந்து தவம் செய். அங்கு நான் வந்து உபதேசிக்கிறேன்," என்று சொல்கிறார். அப்படியே ஞானபூமியை நாடி வருகிறாள் அன்னை. காவிரிக் கரையிலே முனிவர்கள் எல்லாம் இருந்து தவம் செய்யும் ஒரு அழகிய காவினைக் கண்டு அங்கேயே தவம் செய்ய முனைகிறாள். இன்பத்தைத் தருகின்ற முத்தியின் தன்மையைத் தெரிந்து கொள்ள வந்தவள் ஆதலின், இனிய சுவையுடைய நீரையே திரட்டி லிங்கத் திருஉரு அமைத்துக் கொள்கிறாள். இந்த அப்புலிங்கத்திற்கும் அபிஷேகம் முதலியன செய்து ஆராதனை பண்ணுகிறாள். இவள் தன் தவத்திற்கு இரங்கி அண்ணல் அக்காவிற்குவந்து அவளது சந்தேகத்திற்கு விளக்கம் கூறுகிறார். அவர் கூறியது இதுதான். 'உலகங்கள் எல்லாம் என் அருள் வழியே நடப்பன. நடனத்தைப் பிறருக்கு கற்பிக்க விரும்பும் நடன ஆசிரியன் முதலில் தானே நடனம் ஆடிக் காட்டுதல் போல உலக மக்களுக்கு யோக நிலையையும் போக நிலையையும் பயிற்றுவிக்க நானே நடத்திக் காட்ட வேண்டியிருக்கிறது. உலகில் உள்ள ஆன்மாக்கள் எல்லாம் போகத்தை நுகர உன்னை மணந்து தழுவி போகியாகவும், யோக சித்திபெற்று மெஞ்ஞானத்தை அடைந்து முத்தி அடைவதற்காக போகியாக இருந்த நான் யோகியாகவும் இருக்கிறேன்.' என்கிறார். யோக நிலையில் இருக்கும் ஆண்டவனே போகியாகவும் காட்சி தரும் ரகசியம் இதுதான் என்று அன்னை அறிகிறாள். நாமும் தெரிகிறோம்.

இத்துணை விஷயங்களை நாம் தெரிந்தாலும் இப்படி ஒருவரே யோகியாகவும் போகியாகவும் இருத்தல் சாத்தியமானதா என்று அடிக்கடி சந்தேகம் உறுவோம். அப்படி இருத்தல் சாத்தியமே என்பதை நமக்கெல்லாம் எடுத்துக் காட்டும் அளவில் யோகியாகவும்

போகியாகவும் வாழ்ந்து காட்டியவர்களே தவத்திரு பொன்னையா சுவாமிகள். இளமையிலேயே இவர்களது உள்ளம் துறவில் ஈடுபட்டிருக்கிறது. எனினும் விதிப்பயனுல் பருவம் எய்தியபோது தனக்கெனத் தாய்தந்தையர் நிச்சயித்து வைத்திருந்த பெண்ணை மணக்க இசைந்திருக்கின்ருர்கள். இந்த நிலையில்தான் திருவனந்தபுரம் சென்று அங்குள்ள மகம்மதிய முனிவர் ஒருவரிடம் சீடராய் அமர்ந்திருக்கிருர்கள். திருநெல்வேலி அமரர் ஜே. சக்ரபாணி நம்பியார் அவர்களது நண்பராக வாழ்ந்திருக்கிருர்கள். நம்பியார் அவர்கள் மூலம் இவர்களது குடும்ப நிலையை அறிந்த அம் முனிவர் இவர்களை மனைவியாரோடு வாழ உத்திரவிட்டிருக்கிருர்கள். அதன்பின் குரு வாக்கைத் தட்டாமல் இல்லறம் நடத்தியிருக்கிருர்கள். இல்லறம் என்னும் நல்லறப் நடத்தும்போதும், ஏதோ புளியப்பழமும் தோடும்போல, ஒட்டியும் ஒட்டாமலுமே வாழ்ந்திருக்கிருர்கள். குருநாதர் அருளால் பல நல்ல சித்த வைத்திய முறைகளைத் தெரிந்து அதன் மூலம் மக்கள் இனத்திற்கு சேவை செய்திருக்கிருர்கள். இப்படி யோகியாகவும் வாழ்ந்தே மற்றவர்களுக்கு வழிகாட்டியிருக்கிருர்கள்.

இவர்கள் கடைசியில் வந்து குடியேறி நிலைத்து நின்ற ஊர் கரிவலம் வந்த நல்லூர், சங்கரன் கோவிலை அடுத்த சிற்றூர். அன்று அதிவீரராம பாண்டியன் இருந்து அரசு செலுத்தியதோடு அங்குள்ள பால்வண்ணனை-கருவை அந்தாதி என்று பாடல் பாடப்பட்டிருப்பதை எல்லாம்தான் அறிவோமே. அந்த பாண்டியன் வழியிலேயே பால்வண்ணனை நினைந்து நினைந்து வழிபட்டிருக்கிருர்கள்.

மாலுண்டு நெஞ்சே வருந்துவது என் ?
பால்வண்ணன் காலுண்டு அடியார்கனிந்து
இசைத்த-நூலுண்டு
வாழ்த்திட வாயுண்டு அலர் சொரியக்
கையுண்டு
தாழ்த்திடவும் உண்டேதலை

என்றபடி இறை அருளில் திளைத்து வாழ்ந்திருக்கிருர்கள்.

வீரமறவர் குலத்திலேயெ பிறந்தவர்கள் என்ருலும் நல்ல சாந்த சொரூபி. கட்டான உடலும் பொன்னுன மேனியும் படைத்தவர்கள். சம்பாஷித்து அளவளாவதற்கு உகந்த பெரிய மனிதர். எனக்கு அவர்களோடு அவ்வளவு நெருங்கிய பழக்கம் இல்லை என்ருலும்பல தடவை அவர்களை சந்தித்து சல்லாபித்து இன்புற்றிருக்கிறேன். பல சிறப்புகள் வாய்ந்த இந்தத் தவத்திரு பொன்னையா சுவாமிகளின் சிறப்பு-அவர் யோக பொகீஸ்வரராக வாழ்ந்ததே என்று கருதுகின்றேன். அப்படி வாழ்தல் கூடுமா என்று சந்தேகப்படுபவர்களுக்கு எல்லாம் எடுத்துக்காட்டாக நிற்பவர்போல, வாழ்ந்து காட்டியிருக்கிருர்கள். அந்த அமரர் நினைவு என்றும் பசுமையாக இருப்பதாகுக. அவர்கள் மக்களும் பிறரும் எல்லா நலமும் பெற்று வாழ அந்தப் பால்வண்ணன் அருள் புரிவாராக.

❋

## உதயம் சந்தா விபரம்

சிறப்பு மலர்கள் உள்பட 'உதயம்' ஓராண்டு சந்தா **ரூபாய் ஐந்து.** 'உதயம்' உங்கள் இல்லம் தேடிவர இன்றே ஐந்து ரூபாய் அனுப்பி வைத்து சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

ஓராண்டுக்குக் குறைந்த சந்தாக் கிடையாது.

விபரங்களுக்கு
நிர்வாகி, "உதயம்"
சென்னை-2

# காமராஜ் வளர்த்த செடி !

(அட்டைப்பட விளக்கம்)

**காங்கிரஸ்** பொதுக் காரியதரிசி திரு. ஜி. ராஜகோபாலன் மரணத்தினால் காங்கிரஸ் உலகத்துக்கு ஏற்பட்டுள்ள நஷ்டம் மிகப் பெரிது.

அவர் பலகாலம் தமிழ்நாடு காங்கிரஸ் ஆபீஸ் நிர்வாகியாக இருந்தார். தலைவர் காமராஜ் அவர்களுக்கு காரியஸ்தராக இருந்தார். தமது சுறுசுறுப்பின் மூலம், செயல் திறத்தின் மூலம் தலைவரின் ஆதரவைப்பெற்று உயர்ந்தார்.

தலைவர் காமராஜருக்கு, ராஜகோபாலன் மறைவு தனிப்பட்ட நஷ்டம். தலைவரின் ஜாதி சார்பற்ற கொள்கைக்குக் கூட ராஜ கோபாலன் மரணம் ஒரு அதிர்ச்சியைத் தரக் கூடியது ஆகும்.

தமிழகத்துத் தாழ்ந்த குடி மக்களின் நியாயமான உரிமைகளைக் கட்டிக் காக்கும் வீராதி வீரப் பெரியார், தலைவர் காமராஜரை 'பச்சைத் தமிழர்' என்று போற்றுகிறார். பச்சைத் தமிழர் நலன் அவர் கையில் அவ்வளவு பத்திரமாக இருக்கிறது என்று பொருள்.

அத்தகைய காமராஜர் மற்ற சமூகத்தினரை ஒதுக்கிவிடவில்லை. அவர்களுடைய தொண்டின் சிறப்பைக் குறைத்து மதிப்பிடவில்லை: அவர்களுக்கு உரிய இடமும் அதற்கு மேலும் தந்தார் என்பதற்கு ராஜகோபாலன் நிலை ஒரு பிரத்யட்ச சான்றாக இருந்தது.

தலைவர் காமராஜ் மற்றவர்களை நம்புகிறார். உலகத்தை நம்புகிறார். அதனால் உலகமே அவரை நம்புகிறது. விஸ்வாசமான ஊழியர்கள் காமராஜ் அவர்களின் ஆதரவு மூலம் எந்த நிலைக்கு உயர முடியும் என்பதற்கு, ராஜகோபாலன் சரித்திரம் ஒரு பிரத்யட்ச எடுத்துக்காட்டு.

ஒன்பது அல்லது பத்து ஆண்டுகளுக்கு முன்பு ஒரு தடவை, திருப்பூர் காங்கிரஸ் சமயத்தில் ராஜகோபாலன், காமராஜரின் எதிராளிகளுக்குப் பாய் விரித்ததுண்டு. ஆனால் மண் குதிரையை நம்பி ஏமாந்தது பற்றி உணர்ந்து வருந்தி வந்த போது, தலைவர் அவரை மன்னித்து ஏற்றுக் கொண்டார். அதன் பின்னர் அப்பழுக்குச் சொல்ல இடமில்லாமல், விஸ்வாசமாக இருந்தார், உயர்வும் பெற்றார்.

ராஜகோபாலன் மறைந்த சில நாட்களுக்குள்ளாக, பெரிய இடத்தைச் சேர்ந்தவர்கள் சிலர் ரூ. 2 லட்சம் அவர் குடும்பத்துக்காக நிதி திரட்டி இருப்பதாக அறிகிறோம். ராஜகோபாலன் குடும்பத்துக்கு அவர்கள் அர்த்தத்தோடு அனுதாபம் தெரிவிக்கிறார்கள். ராஜகோபாலன் மறைவுக்கு துக்கத்தையும், அன்னாரது மனைவி மக்கள், தாயார் ஆகியோருக்கு அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

தலைவர் காமராஜ் அவர்களே! தாங்கள் வளர்த்த நல்ல செடிகளில் ஒன்று பட்டுப் போயிற்று. சோலைவனத்தில் ஜாதிச் செடி இருந்த இடம் இன்று சொட்டை பாய்ந்துவிட்டது. காலதேவன் செய்துவிட்ட கோலம் இது, யாரை யார் நோவது?

ராஜகோபால் அகால மரணத்தையொட்டி நாம் செய்யக் கூடியது அவரைப் போல உழைப்பது தான். அவரைப் போல தொண்டாற்ற உறுதி கொண்டு மறைந்த ராஜ கோபால் நினைவுக்கு நாம் மரியாதையைத் தெரிவித்துக் கொள்வோமாக !



காமராஜ் பிறந்த நாள் விழாவையொட்டி நடந்த ஜனநாயக சோஷலிச விழா நிகழ்ச்சிகளின் திரைப் படத்தை தலைவர் காமராஜ் பாலர் அரங்கில் பார்க்கவந்த போது எடுத்த படம். செய்திப் படத்தை தயாரித்த கலைஞர் எஸ் டி. சுந்தரம், கன்னிக்கண்ணன், கலைஞர் சாரங்கபாணி ஆகியோர் தலைவரை வரவேற்கும் காட்சி.

# திலகம்

—மதுரை மூவேந்தன்

"சார் தந்தி!",

ஆபிஸ் கணக்குகளில் ஆழ்ந்திருந்த நான் போஸ்ட் மேனின் கூப்பாடைக் கேட்டு வாசலுக்கு ஓடோடிச் சென்றேன். கையெழுத்து இட்டபின் தந்தியைக் கையில் வாங்கிக் கொண்டேன்.

பிரித்துப் படித்தேன்.

உலகில் பிறந்த அனைவரும் ஒருநாள் இறக்கத்தான் போகிறார்கள் என்பதை என் அண்ணன் குமரேசன் நிரூபித்திருந்தான்.

மேஜையை நோக்கினேன். வீட்டில் இருந்து கணக்குகளை எழுதுவதற்காகக் காரியாலயத்திலிருந்து கொண்டுவந்திருந்த காகிதக் கட்டுகளும் புத்தங்களும் அலங்கோலமாக அங்குமிங்கும் கிடந்தன. அவற்றையெல்லாம் ஒழுங்கு சேர்த்து ஒழுங்காக வைத்தேன். பின்பு ஆபிஸ் மானேஜருக்கு இரண்டு வாரம் விடுமுறை கோரி கடிதம் எழுதி உறைக்குள் திணித்தேன். ஊருக்குப் புறப்படுவதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளும் 'சட்புட்' என்று செய்ய ஆரம்பித்தேன்.

என் நினைவு பின்னோக்கி ஓடியது.

அப்போது நான் பத்தாவது வகுப்பு படித்துக்கொண்டு இருந்தேன். என் அண்ணன் குமரேசன் படித்து முடித்துவிட்டு ஏதோ ஒரு கம்பெனியில் வேலை செய்து கொண்டிருந்தார். அப்போதெல்லாம் அண்ணன் கம்பெனியிலிருந்து வந்தவுடன் அறைக்குள் சென்று காகிதத்தையும் பேனாவையும் எடுத்துக் கொண்டு என்னவோ எழுதுவார். எழுதி முடித்த பின் தானே அதைப் பலமுறை படித்துக் கொள்வார் பிறகு என்னைக் கூப்பிடுவார்.

"தம்பி, இதைக் கொண்டுபோய் அடுத்த வீட்டு கோமதி அக்காள்கிட்டே கொடுத்திடு என்பார்.

''சரி அண்ணா'' என்று நான் நல்ல பிள்ளை போல் ஒப்புக் கொண்டு தெருவில் நடப்பேன். என் மனம் சும்மா இருக்காது. மெல்ல கடிதத்தைப் பிரிப்பேன், படிப்பேன்,

உள்ளே அண்ணன் கோமதியின் அழகைப் பற்றியும் குணத்தைப் பற்றியும் இன்னும் என்னென்னவோ வெல்லாம் எழுதியிருப்பார்.

எனக்கு அப்போது காதல் என்றால் என்ன அதில் விழுந்தவர்கள் அடையும் இன்ப துன்ப நிலைகள் என்ன?—இதெல்லாம் ஒன்றும் தெரியாது. எனவே நான் கடிதத்தை முன்பு மடித்தபடியே மடித்து விடுவேன்.

ஒரு தடவை அண்ணன் தன் கடிதத்தில் எழுதியிருந்தார். 'கோமதி' உன் நெற்றி இளம் பிறை போன்றது. கவிஞர்கள் கூறுவார்கள் 'இளம் பிறை வளைந்த போர்வாளை ஒத்து இருக்கிறது' என்று. அப்படிப் பார்க்கும் போது உன் நுதல் ஒரு வாள். அங்கே உன் நெற்றியில் நீ வைத்துக் கொண்டிருக்கும் 'சிவந்த திலகம் இருக்கின்றதே அது என்ன தெரியுமா? வாளிலே ஒட்டிய இரத்தப்பொட்டு. போரிலே குருதிபட்ட அந்த வாளை மக்கள் புகழ்வர். அழகுக்காக, மங்கலமான தன்மைக்காக நீ உன் நெற்றியில் கொண்ட திலகத்தை நான் புகழ்கிறேன். இதில் ஏதாயினும் தப்பு இருக்கின்றதா?

இப்படி அவர் எழுதியிருந்தது என் நெஞ்சத்தில் ஏனோ அப்படியே மனனம் ஆகிவிட்டது. நான் நினைப்பேன். 'என்ன அண்ணன் இவர்? பெண்கள் என்றால் பொட்டு வைத்துக் கொள்ளத்தானே செய்வார்கள்? இதைப்போய் அண்ணன் பெரிய விஷயமாய் எடுத்துக் கொண்டு கண்டபடியெல்லாம் எழுதியிருக்கின்றாரே, சுத்தக் கர்நாடகம்!

பிறகு சில நாட்களில் அண்ணனுக்கும் கோமதி அக்காளுக்கும் கல்யாணம் நடந்து விட்டது. அண்ணன் கல்யாணத்திற்கு முன்னெல்லாம் கோமதியை 'அக்காள்! அக்காள்!' என்று அழைத்து வந்த நான் 'அண்ணி! அண்ணி!' என்று கூப்பிட வேண்டியதாயிற்று. முதலில் தட்டுத் தடுமாறிய போதிலும் நாட்கள் செல்லச் செல்லப் பழகி விட்டது. பிறகு ஒரு நாள் கேட்டேன்: ஏது அண்ணா, இப்போதெல்லாம் அண்ணிக்குக் கடிதம் எழுதுவதை விட்டுவிட்டாய் போலிருக்கிறதே!"

அப்பொழுது அண்ணன் என் காதைச் செல்லமாய்த் திருகியபடி, ''மண்டு இப்பொழுது தான் அண்ணி நம் வீட்டோட வந்தாகி விட்டதே! மறுபடியும் ஏன் கடிதம் எழுதி அனுப்பணும்? இன்னும் கொஞ்சநாளில் நீயும் நான் எழுதி அனுப்பின மாதிரி கடிதத்தை யாருக்காயினும் எழுதி அனுப்பினுலும் அது ஆச்சரியப் படுத்தற்கில்லே!'' என்று சிரித்துக் கொண்டே கூறினர்.

''அது சரி அண்ணு, நீ ஏன் அண்ணி வைத்திருந்த பொட்டைப்பற்றியெல்லாம் பத்தி பத்தியாய் எழுதினுய்? ஏன் அண்ணு சொல்லேன்''

''அடெ அம்பி, நான் எழுதியதெல்லாம் நீ படித்தாயா? நல்ல பையன் நீ!......ம்......உன் கேள்விக்கெல்லாம் நான் பதில் சொல்லிக் கொண்டிருந்தால் அப்புறம் ஊர், உலகத்தை மறக்க வேண்டியதுதான். சரி, நீ போய் படி.'' —இப்படி அவர் கூறி விட்டார்.

நான் உயர்நிலேப் பள்ளிப்படிப்பு முடித்துக் கொண்டு கல்லூரியில் சேர்ந்தேன். அண்ணன் அண்ணியைப் பற்றிப் புகழ்ந்து கடிதம் எழுதியதின் உண்மை எனக்கு இப்போது நன்கு புரிய ஆரம்பித்தது. அப்போதுதான் உலகத்தில் 'காதல்' என்பது மிகப் பொல்லாதது என்பதை உணர ஆரம்பித்தேன்.

என்ருலும் அண்ணி வைத்துக் கொண்ட திலகத்திற்கேபல பத்திகள் அண்ணன் எழுதிருரென்ருல் உண்மையில் அவர், அழகை இரசிக்கும் தன்மையை அதிகமாகக் கொண்டிருந்தார் என்பது குன்றின் மேலிட்ட விளக்காக எனக்கு தெரிந்தது.

எனக்குக் கல்லூரிப் படிப்பு முடிந்தது. வேலே தேடினேன். மதுரையில் இருக்கும் எனக்கும் நாக்பூரில் வேலேகிடைத்தது. வருடத்திற்கு ஒருமுறை விடுமுறையில் மதுரைக்குச் செல்வேன். ஆனுல்...

இப்பொழுது இந்த வருடம் முடியும் முன்னரே மதுரைக்குச் செல்லும்படி செய்யத என் அண்ணன் இறந்த காரணத்தை நினைக்கும் போது என்னையறியாமலேயே நான் 'ஓ' வென்று அழுதுவிட்டேன்.

இரவே வண்டி ஏறினேன்!

அண்ணனின் இறுதிச் சடங்குகள் எல்லாம் முடிந்தாகிவிட்டன. வீடே அமைதியில் ஆழ்ந்து கிடந்தது.

ஐயோ! அண்ணன் உடலின்மீது தீயை வைக்கும் சமயத்திலே...அண்ணி துடித்தாளே ...அப்போது நான் இரத்தக் கண்ணீர் வடித்தேன். என் வாழ்வில் மறக்க முடியாத சம்பவம் ஒன்று உண்டு என்று கூறினுல் அது அண்ணி துடிதுடித்ததை நான் கண்டதுதான்.

ஆறுதினங்கள் ஆறு யுகமாய்க் கழிந்தன. அன்று—

நான் திண்ணேயில் கடந்த கால நிகழ்ச்சிகளிலே மூழ்கிக் கிடந்தேன். கண்கள் திறந்து கொண்டுதான் இருந்தன. ஆனுல் காட்சிகள் காண முடியாதொரு நிலேமை! ஒலியுணரும் காதுகளும் இருக்கத்தான் இருந்தன. ஆனுல் புற ஒலிகளேக் கேட்க முடியாதொரு நிலேமை! நான் திண்ணேயில்தான் அமர்ந்திருந்தேன், எங்கோ வான முகட்டில் மிதப்பது போன்றதோர் உணர்ச்சி!

''ரமணி!''

''..........''

''ரமணி! ரமணி!!''

நான் தன்னுணர்வுக்கு வந்தேன். மெல்லத் திரும்பிப் பார்த்தேன், சோகத்தின் திருஉருவாம் அண்ணி நின்றிருந்தாள்.

அண்ணி தூய வெண்ணிறச்சேலே அணிந்திருந்தார். கூந்தல் நுனியில் பொடி முடிச்சு ஒன்று. முகமெல்லாம் இரத்த ஓட்டமின்றி வெறுப்பு! அண்ணியின் இரண்டு கைகள், இலே வளராத கொப்பைப் போல் இருந்தன.

நான் அண்ணியின் வெறும் கழுத்தைக் காணத் துணிவில்லாதவனுய் ''என்ன அண்ணி?'' என்று வினுவினேன்.

''உள்ளே வந்து சாப்பிட்டுவிட்டு யோசனை செய்து கொண்டு இரேன்.''

''சரி அண்ணி!''

நான் சமையற் கட்டை ஒட்டியிருக்கும் அறையை அடைந்தேன். சோறு முன்பே பரி

மாறப்பட்டிருந்தது. அம்மாதான் படைத்திருக்க வேண்டும்! அம்மா கிணற்றடியில் கைகழுவுவது நன்ருகத் தெரிந்தது.

நான் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன் கடனுக்காக.

இடையிலே விக்கல்! இரண்டு வாய் தண்ணீர் இருந்தால் போதும். ஆனுல் - தண்ணீரை எடுத்து வைக்க அம்மா மறந்து விட்டார்கள்.

இதற்குள் அண்ணியே தண்ணீரைக் கொண்டு வந்து விட்டாள்.

நான் அண்ணியின் நெற்றியைப் பார்த்தேன். அங்கே அண்ணன் புகழ்ந்த திலகம் இல்லை! நான் 'கடிதம் அனுப்பிய நிகழ்ச்சிகளை'யெல்லாம் ஒரு முறை கண்ணெதிரே கண்டேன். என் கண்களிலே காவிரி பெருகியது. ஆனுல் அண்ணிக்குத் தெரியாதபடி அதை மறைத்துவிட்டேன்.

''இன்னும் சிறிது தண்ணீர் கொண்டு வாருங்கள் அண்ணி!''

அண்ணியும் கொண்டுவந்தாள். நான் குடித்துக் கொண்டே, அண்ணி, அண்ணன் இப்படித் திடீர் என்று துரோகம் செய்வார் என்று நான் எண்ணவே இல்லை '' என்று கூறினேன்.

அண்ணி அமைதியுடன், ''ரமணி, அவர் இப்படித் திடீர் என்று செல்வார் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை. ஆனுல் நடந்து விட்டது'' என்ருர்.

நான் அண்ணியையே இமை கொட்டாமல் நோக்கினேன்.

''ரமணி, உன் அண்ணன் இறந்து விட்டார் என்று அனைவரும் கூறுகிருர்கள். உண்மைதான். அவருடைய உடல் இறந்து விட்டது. ஆனுல் உயிர் மறைந்துவிடவில்லை. அது என்னுடன் என் உடலுடன் ஒன்ருகக் கலந்துவிட்டிருந்தது, மணத்திற்கு முன்பேயே! அவர் என்னுள்ளே வாழ்கின்ருர்.''

அண்ணி கண்ணீர் சிந்தினுர். நான் கண்ணீரால் தட்டில் கையைக் கழுவி எழுந்தேன்.

அண்ணியினுடைய தூய்மையான மனதும், அவளும் அண்ணனும் ஒன்றி வாழ்ந்த வாழ்க்கையும் என்ருல் எண்ணிப் பார்த்து உணர முடியவில்லை. உண்மையிலேயே அண்ணி 'ஒரு மனித தெய்வம்' என்றே எனக்குப்பட்டது.

நான் அண்ணியின் முகத்தைப் பார்த்தேன். அவரது நெற்றியை என் கண்கள் கண்டன. நெற்றியிலே அண்ணி திலகம் வைத்து ஏறியிருந்த வட்டத் தழும்பு ஒன்றை நான் மிகமிக நன்ருகப் பார்த்தேன்.

''உண்மைதான்! அண்ணனுடைய உடல் தான் இறந்திருக்கிறது. அவரது உயிர் மறையவில்லை. அவர் அண்ணியினுள்ளே வாழ்கின்ருர். அண்ணி, இனிமேல் கைம் பெண் என்னும் காரணத்திஞல் நெற்றியில் திலகம் வைத்துக் கொள்ளக் கூடாது. ஆனுல் அண்ணியின் நெற்றித் திலகத் தழும்பு இன்னும் அண்ணன் அண்ணியுடன் வாழ்கின்ருர் என்பதை என் கண் முன்னேயே நிரூபித்து விட்டதே!''—என் உள்ளம் வேதனையில் ஓர் இதம் கண்டது.

அந்த இதத்திலே அண்ணன் மறைந்து விட்டானே என்று ஏங்கிய என் கவலையெல்லாம் எங்கோ பறந்து விட்டது போன்ற நிறைந்த உணர்ச்சிகள்!

உலகம் நல்லது! அதில் வாழும்
மனிதர்களும் நல்லவர்களே!
ஆனுல் மனிதர்களில் சிலர்
கெட்டவர்களாக இருக்கிருர்களே, ஏன்?
கெட்டவர்களாக மனிதர்கள் பிறப்பதில்லை
சந்தர்ப்பமும் சூழ்நிலையும்தான்
மனிதர்களைக் கெட்டவர்களாக்குகிறது.
அது அவர்கள் குற்றமல்லவே.

—'யாரோ'

# நடைப்பிணம்

கு. சண்முகசுந்தரம்

## காட்சி—1

இடம் : பாதை

இருப்போர் : மனோகர்: குமாரி

மனோகர் : குமாரி ! குமாரி! கொஞ்சம்தான் நில்லேன் !

குமாரி : உங்களுக்கு என்ன வேண்டும் ?

மனோ : ஒன்றும் வேண்டாம்...ம்...நீ மில்லிலிருந்து வேலை முடிந்து தனியாக வீட்டுக்குப் போகிருயே/துணைக்கு நானும் வரலாமே என்றுதான் கூப்பிட்டேன்.

குமாரி : ஓகோ ! ஏதோ எதிர்வீட்டுக்காரர், பெரிய மனிதர் கூப்பிடுகிருரே என்று இந்நேரம் தங்களுடன் நின்று பேசினேன். ஆனல்...என்னல் ஆகவேண்டியது ஒன்றும் இல்லையென்று இப்போதுதான் தெரிகிறது. ஆமாம்...நான் நாள்தோறும் தனியாகத் தானே போகிறேன். இன்று மட்டும் துணை எதற்கு ? எனக்கொன்றும் துணை தேவையில்லை. நான் வருகிறேன்!

மனோ : ம் ..அம்மா ஆமாமாம். உனக்குத் துணை தேவையில்லை தான். நீ தனியாகவே போய்விடுவாய் மூன்று மைல் தூரத்தை மூன்று நிமிஷத்தில்கூட கடந்து விடுவாய். ஆனல்! எனக்குத் துணை தேவைப்படுகிறதே...ஆதனல்தான். ஹி... ஹி...உம். வரலாமா !

குமாரி : ஐயா, உங்களுக்கு கோடி வணக்கம். நீங்கள் ஒன்றும் எனக்குத் துணை வரவும் வேண்டாம்: நான் உங்களுடன் வர விரும்பவுமில்லை, வேண்டுமானல் இப்படியே பாதையில் நின்று காத்திருங்கள் : வேறு யாராவது துணைக்குக் கிடைக்கும் வரையிலும், நான் போகிறேன்.

## காட்சி—2

இடம் : பாதை.

இருப்போர் : மனோகர், குமாரி.:

மனோ : குமாரி. இங்கே பார் என் கையில் என்ன இருக்கிறது என்று...

குமாரி : இதுகூடவா தெரியாது ? மல்லிகை பூச்சரம் ! வழியிலிருக்கும் கோவிலில் வேண்டிக் கொண்டீர்களோ ?

மனோ: இன்னும் நீ என்னை சரியாக புரிந்துகொள்ளவில்லையா, குமாரி? என் கோமளமே ! உன் குமுதவாய் திறந்து – அத்தான் என்று ஒருமுறை அழைக்க மாட்டாயா என்னை? எங்கே, என்னைப்பார். உன் பட்டு நிகர் உடலைத்தொட்டுத் தழுவத் துடிக்கும் என கரங்களைக் கேள். உன்மீது நான் கொண்டுள்ள அன்பு எப்படிப்பட்டது. என்று ! உன் செம்பவள இதழ்களின் சிரிப்பிலே சிந்தையைப் பறி கொடுத்து, நிற்கிறேனே நான் ; உன் வண்ண முகத்திலே சுழலும் வண்டு நிகர் விழிகளுடன் போட்டியிட முடியாமல் தன் தோல்வியை ஒப்புக் கொள்ளும் என் விழிகளைக், கேள், நான் உன்மீது கொண்டிருக்கும் அன்பு எத்தகையது என்பதை !

குமாரி : உம்......கேட்டிருக்கிறேனே. இது போல் அலங்காரச் சொற்களை அள்ளிவீசும் ஆடவர்கள், தங்கள் விருப்பத்தை நிறைவேற்றியபின் ஏமாற்றப்பட்ட வனிதையர் பலரின் அழகிய மலரைப் பறித்து அதன் மணத்தை நுகர்ந்துவிட்டுக் கசக்கி எறிவதுதான் ஆடவர்க்குப் பொழுது போக்கு என்ற பொன் மொழியையும் கேட்டிருக்கிறேன்.

மனோ: நானும் அப்படி ஏமாற்றி விடுவேன் என்று எண்ணுகிருயா, குமாரி: இல்லை ! என் கண்ணே! உன்னை நான் ஏமாற்ற மாட்டேன் நீ இல்லையேல் என் வாழ்வில் வளமில்லை. ஏன்...வாழ்வே இல்லை.

குமாரி ; நீங்கள் மாடி வீடுகள் பலவற்றிற்குச் சொந்தக்காரர். நானே மாடாக உழைத்தால்தானே பிழைப்பு நடக்கும் என்ற நிலையில் உள்ளவள், இந்த நிலையில் நீங்கள் என்னை ஏற்றுக் கொள்வீர்கள் என்று நான் எப்படி நம்ப முடியும் ?

மனோ : நான் ஒன்றும் உன்னை நம்பச்சொல்லவில் லை! உன் பேரில் எனக்குள்ள அன்பைத்தான் எடுத்துக் கூறினேன். அவ்வளவுதான்...இனி நீ செய்யும் முடிவைப் பொறுத்தே இருக்கிறது– என் வாழ்வு ! மணமா, மரணமா என்பதைத் தெரிவித்துவிடு, குமாரி !

குமாரி : சேச்சே; என்ன பேச்சு இது?

மனோ: ஏன், நான் இறந்து போவதில் உனக்கு அத்தனை கவலையா ? குமாரி!

குமாரி : இருக்காதா, பின்னே ! நீங்கள் இறப்பதற்கு நான் ஒருபோதும் காரணமாக இருக்கமாட்டேன்.

மனோ: ஆஹா...அப்படியென்...ருல் உம்...... புரிந்து கொண்டேன்.

குமாரி: ஆமாம்...நீங்கள் புரிந்து கொண்டீர்கள். ஊரும் உலகமும் புரிந்து கொள்ள வேண்டாமா ?

மனோ; எல்லோருக்கும் புரியும்படி விரைவிலேயே நம் திருமணம் நடைபெறும். மகிழ்ச்சிதானே !

குமாரி: அந்த நன்னாளை ஆவலோடு எதிர் பார்க்கிறேன் அத்தான் !

மனோ: ஆஹா, நீ அத்தான் என்றழைத்தது எனக்கும் செந்தேனைப்போல் இனிக்கிறது, தெரியுமா ? எங்கே ஓடுகிருய் ? இன்னும் என்னை ஏன் தவிக்கவிட்டு வேடிக்கை பார்க்கிருய்?

குமாரி: என்ன உறவு ஏற்பட்டாலும், அது கழுத்தில் தாலி ஏறும்வரை ஒரு அளவோடு இருக்கவேண்டும், தெரியுமா, அத்தான்.

மனோ: தெரியும், தெரியும். கழுத்தில்தான் கூடிய சீக்கிரம் தாலி விழப்போகிறதே' உம்...அப்போது என்ன செய்வாய் ?

குமாரி. இனி என்ன செய்வேன். பிடிபடாமல் இருக்கும் வரைதான் பிகு எல்லாம். உங்கள் பிடியிலிருந்து தப்ப முடியுமா ?. உங்கள் இஷ்டம் !

(சிரிப்பொலி......)

## காட்சி—3

இடம்: மனோகர் வீடு

இருப்போர்: மனோகர், அவன் தந்தை முத்துரங்கம்.

முத்துரங்கம்: டேய், மனோகர், நில்! இப்போது மணி என்ன ?

மனோ: மணி பனிரண்டரை ஆயிற்று அப்பா.

முத்து: இல்லே, தெரியாமல்தான் கேட்கிறேன். காலா காலத்திலே சாப்பிட்டு விட்டு வீட்டிலே இருக்காமல் இப்படி நடு சாமத்திலே வந்து வீட்டிலே நுழையறது உனக்கே நன்ருக இருக்கிறதாக்கும்! இந் நேரம் எங்கே போயிருந்தாய்?

மனோ: எங்கும் இல்லையப்பா! சும்மா அப்படியே கொஞ்சம் தூரம் போய்......

முத்து: காற்று வாங்கிக் கொண்டு வந்தீர்களா நீயும் அந்த எதிர் வீட்டுப் பெண்ணும்?

மனோ; அப்பா!

முத்து: எனக்கு எல்லாம் தெரியும்பா! நீ எங்கே போயிருந்தாய், ஏன்னென்ன செய்தாய்? என்பது எல்லாமே எனக்குத் தெரியும். மோட்டார் டிரான்ஸ்போர்ட் கம்பெனி முதலாளி முத்துரங்கம் என்ருல் முட்டாளும் கூடக் கையெடுத்துக் கும்பிடுவானே! என் மரியாதை, அந்தஸ்தையெல்லாம் காற்றில் பறக்கவிட விருப்பமாடா உனக்கு? உன்னை இப்படியே விடுவது இனி அவ்வளவு நல்லதல்ல.

மனோ: அப்படியொன்றும் இல்லை அப்பா!

முத்து: இல்லையென்று சொல்வாய்! அதை நம்ப நான் தயாராக இல்லை, குறித்து வைத்துக்கொள். இன்றைக்குச் சரியாக இருபதாவது நாள் உனக்கும் சென்னையிலிருக்கும் என் தங்கை மகள் மரகதத்துக்கும் கல்யாணம் நடந்தே தீரும்! மனோகர் மரகதம்...ஆஹா...! நல்ல பொருத்தம் ஹ...ஹ!

## காட்சி—4

இடம்; மரகதம் வீடு,

இருப்போர்: மனோகர், மரகதம், முத்துரங்கம்

புரோகிதர். மாங்கல்யம் தந்துனேனே... உம்...கெட்டி மேளம்! கெட்டிமேளம்!' (கெட்டிமேளம் ஒலிக்கிறது திருமணம் முடிகிறது)

முத்து, இருவரும் நிறைந்த ஆயுளுடன் பல்லாண்டு வாழ்க இன்றைக்குத்தான் என் நெஞ்சில் அழுத்திக் கொண்டிருந்த பெரிய குறை ஒன்று நீங்கியது!

## காட்சி—5

இடம்: மனோகர் வீடு.

இருப்போர்: மனோகர், மரகதம், முத்துரங்கம் குமாரி

முத்து: வாம்மா, வா! வலது காலை முதலில் எடுத்து வைத்து வா!
(மணக்கோலத்தில் இருவரையும் கண்டதும் பதைத்த குமாரி சற்று நேரம் கழித்து)

குமாரி: அத்தான்!

மனோ, யாரது, குமாரியா!

குமாரி; ஆம்! குமாரி தான் கொஞ்சம் என்னோடு வரமுடியுமா?

மனோ: எங்கேஅழைக்கிருய்?

குமாரி: நம் காதல் என்னும் பயிர் முளைத்து செழித்து வளர இடமளித்த பழைய இடத்

துக்குத்தான், ஏன் இடம் நினைவிருக்கிறதா அல்லது அதுவும்...?

மனோ ; சரி, சரி இங்கே கூச்சல் போடாதே! வா போகலாம்!

## காட்சி—6

இடம் : பாதை.

இருப்போர் : மனோகர், குமாரி

மனோ : எதற்காக இங்கே என்னை அழைத்து வந்தாய் குமாரி! என்ன வேண்டும்?

குமாரி : (அழுதவாறு) ம்...என்ன வேண்டும் என்று கேட்கிறீர்களே, அத்தான்! என்ன பதில் சொல்வேன் நான்? என்னைக் கை விட்டு விடாதீர்கள் என்று கேட்டுக்கொள்ளத்தான் அழைத்து வந்தேன்: அதைத் தவிர வேறு என்ன வேண்டும் எனக்கு? நீங்கள் என்னை ஏற்றுக்கொள்ள மறுத்தால் எனக்கு வாழ்வு இல்லை. அன்றொரு நாள் நீங்கள் சொன்ன சொற்களைத்தான் நான் இன்று திருப்பிச் சொல்கிறேன். நீங்கள் இல்லையேல் எனக்கு வாழ்வில்லை, அத்தான்!

குமாரி : ஏன் அத்தான், மௌனம் சாதிக்கிறீர்கள்? நாம் இப்படிப் பாதியிலே பிரிய நேரும் என்று அன்றே தெரிந்திருந்தால்... நம் காதல் வாழ்வு பகற் கனவாகிவிடும் என்று சந்தேகப்பட்டிருந்தால் ... அன்று உங்கள் செய்கைகளுக்கு எல்லாம் இணங்கியே இருக்கமாட்டேன்.

மனோ : அதை எல்லாம் ஏன் மீண்டும் நினைவு படுத்துகிறாய், குமாரி; அதனாலெல்லாம் இப்போது என்ன கெட்டுப் போய் விட்டது ?

குமாரி : கெட்டுவிட்டதே என் கற்பு! இன்னும் என்ன மீதியிருக்கிறது கெடுவதற்கு?

மனோ : என்னை மன்னித்துவிடு குமாரி! என் தந்தையின் நிர்ப்பந்தம் என்னை இந்த நிலைக்குக் கொண்டுவந்து விட்டு விட்டது நான் என்ன செய்யட்டும்?

குமாரி : என்ன செய்யட்டும் என்று கேட்கிறீர்களா? சொல்கிறேன். ஊரறிய, உலகறிய எனக்குத் தாலி கட்டியிருக்க வேண்டும். தவறி விட்டீர்கள். ஆகையால் இனி உங்கள் கரங்களாலேயே என்னைக் கொன்று விடுங்கள். பட்டுடல் என்று வர்ணித்தீர்களே ஒரு நாள், அந்த உடல்-எழில் மேனி-எரி நெருப்பில் வீழ்ந்து சுட்டுச் சாம்பலாகிப் போகட்டும்! செம்பவள இதழ் எனக் கூறினீர்களே அந்த இதழ்கள் செந்தீயின் சுவாலை பட்டு மேலும் சிவப்பாகட்டும்! உங்கள் மீது காதல் கொண்ட என் நெஞ்சம் அந்த இனிய நினைவுடனேயே கல்லறையில் அமைதியாகத் துயிலட்டும்'

மனோ : பொறு. குமாரி நீ ஏன் சாக வேண்டும்! நாம் கொண்ட உறவு யாருக்குத் தெரியப் போகிறது? பேசாமல் வேறு யாரையாவது மணந்து கொண்டு...

குமாரி : ...ஐயோ. அந்தப் பொல்லாத சொல்லைச் சொல்லி என்னைக் கொல்லாமல் கொல்லாதீர்கள், அத்தான். தங்களுக்கு மட்டுமே இடமளித்த என்னிதயத்தில் இனி வேறு எவரையும் வரவேற்று இடங் கொடுக்க தயாராக இல்லை நான்! மேலும் நம் உறவு இன்று யாருக்கும் தெரியாமல் இருக்கலாம். ஆனால், இன்னும் ஒன்பது மாதங்களில் என் வயிற்றில் என் வயிற்றிலிருந்து உதிக்கும் இளம்பிறை நிலவைக் கண்டுவிட்டு ஊரார் கேட்பார்களே இதன் சொந்தக்காரர் யார் என்று? கொஞ்சுமொழி பேசும் அந்த மழலையின் குறுநகையைக் கண்டுவிட்டு மோட்டார் கம்பெனி முதலாளி முத்துரங்கத்தின் மூத்த மகன் மனோகரை போலல்லவா இருக்கிறது! என்றெல்லாம் கூறுவார்களே, அப்போது யாருக்குத் தெரியாது நம் உறவு?

மனோ : ஐயோ, என்ன சொன்னாய்? நாம் இருவரும் உள்ளங் கலந்து உறவாடிய போது ஏற்பட்ட களிப்பின் சின்னம் உன் வயிற்றிலே கருவாக வளர்கிறதா? நான் ஏமாந்து விட்டேன் குமாரி! ஏமாந்து விட்டேன்.

குமாரி : இல்லை, ஏமாற்றிவிட்டேன் என்று சொல்லுங்கள் பொருத்தமாக இருக்கும். ஏமாந்தது நான்தானே! ஊராரின் இழிசொல் என்ற அம்பு இதயத்தை ஊடுருவி தாக்க, இருவிழிகள் நீர் வடிக்க, எண்ணற்ற தொல்லைகளைச் சந்திக்க வேண்டியவள் நான் தானே!

மனோ : ஐயோ, திரும்பத் திரும்ப அதையே சொல்லி ஏன் என்னை வாட்டுகிறாய் நான் இப்போது என்னதான் செய்வேன்' தலையே சுற்றுகிறது (ஓடுகிறான்)

குமாரி : ஏன் அத்தான் ஓடுகிறீர்கள்? நீங்கள் எங்கு சென்றாலும் நான் விடப்போவதில்லை உங்கள் கையால் என்னைக் கொல்லும் வரை விடமாட்டேன்;

## காட்சி—7

இடம் : மோட்டார் டிரான்ஸ்போர்ட் கம்பெனி

இருப்போர் : மனோகர், டிரைவர்

டிரைவர் : வாங்க சார் கம்பெனிக்கு ஏது இந்த நேரத்திலே வந்திருக்கிறீர்களே? ஏதாவது அவசரமா சார்?

மனோ : ஆமாம். ஒரு காரை எடுத்துக் கொண்டு சீக்கிரம் வா. என் மனம் ஏனோ அமைதியாக இல்லை. உடனே வீட்டுக்குப் போய் மரகதத்தை அழைத்துக் கொண்டு சென்னை புறப்படவேண்டும்.

டிரை : அதற்கென்ன சார். இதோ ஒரு நொடியிலே காரை எடுத்து வருகிறேன்,

## காட்சி—8

இடம் : பாதை.

இருப்போர் : மனோகர், டிரைவர்.

(கார் வேகமாகச் செல்கிறது. திடீர் என்று 'பிரேக்' ஒலியுடன் நிற்கிறது; கூடவே 'ஐயோ! என்று, ஒரு பெண்ணின் குரலும் எழுகிறது.)

மனோ : அடடே டிரைவர் என்னப்பா அது சத்தம்.

(காரின் கதவு திறக்கும் ஒலி)

ஐயயோ. ஒரு பெண்ணல்லவா அடிபட்டுக் கிடக்கிருள். சரி சரி, இந்த இருட்டிலே என்ன செய்வது? எடுத்து வண்டியிலே போட்டுக் கொண்டு கிளம்பு. வீட்டில் போய்ப் பார்த்துக் கொள்ளலாம்.

(காரின் கதவு மூடும் ஒலி)

(கார் செல்கிறது)

## காட்சி—9

இடம் : மனோகர் வீடு.

இருப்போர் : மனோகர், டிரைவர்.

மனோ : மரகதம், மரகதம். என்ன இது சத்தத்தையே காணோம். அறைக்குள் என்ன செய்து கொண்டிருக்கிருள்? (அறையைத் திறந்து மின் விளக்குப் போடும் ஒலி) அடடே. இதென்ன தரையில் அலங்கோலமாகப் படுத்துக் கிடக்கிருள், ஐயோ, அசையாமல் கிடக்கிருளே. கையில் ஏதோ காகிதத் துண்டு என்னவோ தெரிகிறது? என்ன எழுதியிருக்கிருள்?

(காகிதத்தை விரிக்கும் ஒலி)

" எனக்கு மாலையிட்டவருக்கு,

சிலகாலம் தங்களுடன் மனைவியாக வாழும் பாக்கியம் பெற்ற மரகதம், தங்கள் பாதங்களை வணங்கி எழுதுகிறேன். அபலை ஒருத்தியை வஞ்சித்து என்னை மணந்து கொண்ட கொடிய உள்ளம் படைத்த தங்களுடன் வாழ்க்கை நடத்த எள்ளளவும் மனமின்றி, வேதனையுடன் விடை பெறுகிறேன். இந்த விடுதலைக்கு ஒருதுளி நஞ்சு உதவியது. அதற்கும், என் கழுத்தில் மங்கல நாணுடனும், முகத்தில் மஞ்சள் குங்கமத்துடனும் சுமங்கலியாக உயிர்விடும் பாக்கியத்தை ஏற்படுத்தித் தந்த தங்களுக்கும் என் இதயங்கனிந்த நன்றி:

யாரும் என்னிடம் சொல்லி நான் இந்த முடிவைத் தொடரவில்லை, நீங்கள் இருவரும் நிகழ்த்திய வாக்கு வாதங்களை மரநிழல் ஒன்றின் பக்கமிருந்து என் காதாரக் கேட்டபின்புதான் இந்தப் பாதையில் காலடி எடுத்து வைத்தேன். என் ஒரே ஒரு வேண்டுகோள்; இறுதி ஆசை. தங்கள் மனைவி என்ற உரிமையுடன் கேட்கிறேன். ஏன் சகோதரியை — குமாரியை – கைவிட்டு விடாதீர்கள். அவள் கண்ணீரைத் துடைத்து புது வாழ்வு தாருங்கள். அவளைக் காப்பாற்றுவதன் மூலம் அவள் வயிற்றில் வளரும் சிசுவையும் காப்பாற்றுங்கள். என் கனவு அது தான்; நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கையுடன் விடை பெறுகின்றேன.

இப்படிக்கு,
மரகதம்.

ஐயோ, மரகதம்; என்னைத் தவிக்க விட்டுப்போய் விட்டாயா! மரகதம்!

டிரைவர்; சார், அந்தப் பெண்ணுக்கு அடி பலமாகப் பட்டுவிட்டது போலிருக்கிறது. பேச்சில்லாமல் கிடக்கிருள்! சார்,

மனோ: எங்கே, பார்க்கலாம் வா!

(நடை ஒலி)

மனோ : ஐயோ, இதென்ன விபரீதம்! குமாரியா காரில் அடிப்பட்டவள்? கடவுளே! இப்படியும் ஒரு சோதனையா? குமாரி! போய் விட்டாயா! குமாரி! உங்கள் கையால் கொன்றுவிடுங்கள் என்றஉன்கோரிக்கையைக் கொடியவன் நான் நிறைவேற்றி விட்டேன். குமாரி! என் இரு கண்களை இழந்தேன் இனி இந்த உலகில் நான் ஒரு மனிதனுக இமைதியுடன் வாழ முடியுமா? எப்படி முடியும்? நான் ஒரு நடைப் பிணம்! என் உள்ளத்தை—உள்ளத்து உணர்ச்சிகளைப் பறிகொடுத்து விட்ட பரிதாபத்திற்குரிய நடைப் பிணம் நான்! ஹ... ஹ... நான் ஒரு நடைப்பிணம்!

# பாசம் பொல்லாதது

: நீலா ராமமூர்த்தி :

அடுக்களையில் அருணா விசித்துக்கொண்டிருந்தாள். நினைக்க நினைக்க ஆறவே இல்லை அவள் மனம்.

";தங்கை வந்தால்தான் என்ன? இப்படியா மாறுவார் ஒருத்தர்? அருணா என்று வாய் நிறையகூப்பிட்டு எத்தனை நாளாகிறது? நான் மட்டும் வேண்டாதவளா?''

அவள் நெஞ்சம் பொருமியது!

கூடத்தில் சுதாவும் ஒரு விதத்தில் வேதனைப்பட்டுக் கொண்டு தான் இருந்தாள்.

'' இந்த அண்ணாவிற்கு என்ன வந்தது திடீர் என்று வேட்டை நாய் மாதிரி விழுகிறானே மன்னியை பார்த்தால்''

விடைதான் தெரியவில்லை இருவருக்கும்.

பகல் மூன்றுமணி இருக்கும். அருணா எழுந்தாள். கடமை என்று இருக்கிறதே! வேலைக்காரி ''அம்மா! பாத்திரம் போடு'' என்றாள். பக்கத்து வீட்டுப்பெண் வந்து ''மாமி! பின்னிவிடு'' என்றாள். இன்னும் எத்தனையோ அலுவல் காத்திருந்தது அவளுக்காக. காரியத்திற்கு சளைத்தவளா அருணா? எழுந்தால் நொடியில் செய்து விடுவாளே!

கணவனின் உதாசீனத்தால் நொந்துப் போயிருந்த அவள் வெறும் நடைப்பிணமாகக் காக்ஷியளித்தாள்,

சுதா நினைக்கவில்லை இப்படி எல்லாம் என்று, ஏண்டாப்பா வந்தோம்'' என்றுத் தவித்தாள்.

அத்துடன் மகத்தான உண்மை ஒன்றும் அவளுக்கு ''பளிச்'' என்று விளங்கியது.

''ரஞ்சி ரஞ்சி! என்று கொஞ்சுகிறாரே! ஏதாக இருந்தாலும் என் ரஞ்சி தங்கத்திற்குத்தான் முதலில் என்கிறாரே! அப்படி என்ன ஒசத்தி! என்றுக் கோபித்துக் கொண்டு தானே வந்தாள் அவள் மாயவரத்துக்கு!

அவள் கணவன் ராமு வயிறும் பிள்ளையுமாக வந்த தன் தங்கையை மிதமிஞ்சி உபசரித்தானே தவிற இவள் அவமதிக்க வில்லை! உனக்கு இல்லை! போ என்று சொல்லவில்லை எதையும்? அப்படி இருக்கும்போதே ஒன்றும் இல்லாத ஒன்றை பெரிதுப் பண்ணிக்கொண்டு விந்து விட்டாள்! இருவருக்குமாக அவன் வாங்கி வந்த மல்லிகைப் பூவில் தன் பங்குக் கொஞ்சம் குறைந்தால்தான் என்ன? இது தான் எதற்கு எனக்கு! கொடுங்கள் அவளுக்கே என்று வீசிவிட்டு வந்து விட்டாளே!

ரயில் புறப்படுகிற சமயம் கூடக் கெஞ்சினான் பாவம்!

'' வேண்டாம் சுதா! வந்துவிடு! இனி உன் இஷ்டப்படியே நடந்துக்கொள்கிறேன். ஏதோ தாயில்லாப் பெண்ணாயிற்றே என்று மனது அடித்துக் கொண்டது. உறசாகப்படுத்தினேன்''

ரயிலில் பிடிவாதமாக அசையவும் மறுத்தவாறு உட்கார்ந்திருந்த அவள் ஆணவத்தோடு பதில் அளித்தாள்.

''செய்யுங்களேன்! பரவாயில்லை! ஏதோ கொடுத்து வைத்திருக்கிறார்கள்! நடக்கிறது! உங்களுடைய சந்தோஷத்திற்கு இடையே நான் ஒருத்தி எதற்கு! போகிறேன் அண்ணாவிடம்! இதில் பாதி உபசாரமாவது எனக்கு கிடைக்கிறதா அங்கு ' பார்ப்போம்''

''அப்படி என்றால் இப்போதைக்கு வர மாட்டாயா சுதா''

'' அழுகையே வந்து விட்டது அவனுக்கு.

'' வராமல் என்ன? உங்களுக்கு நானும் வேண்டும் என்று எப்போதைக்கு தோன்றுகிறதோ அப்போதைக்கு நிச்சயம் வந்து விடுவேன்! அது வரை''! அவள் பேசி முடிப்பதற்குள் பெரியதொருப் பொறுமலுடன் ரயில் கிளம்பிவிட்டது,

''ஐயோ! என்ன உருக்கம்! எல்லாம் நடிப்பு!

கசப்புடன் பிளாட்பாரத்தைப் பார்த்த அவள் தன்னை அறியாமலேயே கையை ஆட்டினாள் கணவனுக்கு.

அவன்தான் முகம் மலர்ந்து வீடுப் போனான்.

'' திடீர் '' என்று யாதொரு விதமான முன்னறிவிப்பும் இன்றி வந்த அவளைப் பார்த்து ஸ்ரீதரன் திகைத்தான்.

'' என்ன அம்மா இது! சொல்லாமல் கொள்ளாமல் வந்து நிற்கிறாய்? ஒரு வரி எழுதியிருக்கக் கூடாது கார்டில். நேரில் வந்திருப்பனே! அதுதான் இல்லை என்றாலும் ஸ்டேஷனில் உன்னை வரவேற்கும் வாய்ப்பையாவது கொடுத்திருக்கக் கூடாது! போகட்டும்! மாப்பிள்ளை சௌக்கியமா? அவரையும் அழைத்து வந்திருக்கக்கூடாது! அதிகமாய் போய்விடுமா''

தமையனின் பாசத்தை எண்ணிப் பார்த்த அவள் கண் கலங்கியது. மனம் நெகிழ்ந்தது.

''அருணா! ஏன் நிற்கிறாய்? காப்பி கொண்டா சுதாவிற்கு.

''வா! சுதா'' என்று அன்போடு நாத்தனாரின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு உள்ளே போனாள் அருணா.

அன்று மாலை ஆபீஸிலிருந்து வந்ததுமே ''சுதா'' என்றான் ஸ்ரீதர்.

அண்ணனின் ஐந்து வயதுக் குழந்தை ஆனந்தனை மடியில் வைத்து விளையாடியே சிந்தனையில் ஆழ்ந்திருந்த அவள் ஓடி வந்தாள். உள்ளே காரியமாக இருந்த அருணாவும் வந்தாள்.

கட்டுக் கதம்பத்தையும் பட்சணப் பொட்டலம் ஒன்றையும் தங்கையின் கையில் திணித்த அவன் அருணாவை நோக்கி ''காபி டிபன் ஏதாவது உண்டா'' என்றான் அமர்த்தலாக.

''இதோ கொண்டு வருகிறேன்'! என்று உள்ளே ஓடிய அவள் கண் இரண்டும் கலங்கியது! மனம் எதற்கோ ஏங்கியது.

உள்ளே நுழையும் போதே ''அருண்! அருண்'' என்றுக் கொஞ்சுவானே மல்லி பார்த்தாயா! எங்கே திரும்பு! நானே வைக்கிறேன் என்பானே விடாப்பிடியாக. அந்த அன்பு எங்கே?

பாதாம் ஹல்வாவையும் பாசந்தியையும் வரவழைத்துக் கொண்டு ''உம் வாயை திறந்தால்தான் ஆயிற்று'' என்று ரகளை பண்ணுவானே! அந்த ஸ்ரீதரனா இன்று யாரிடமோ, யாரிடமோ என்ன? ஒரு வேலைக்காரியை கேட்பதுப் போல் கேட்கிறான்!

கண்ணைத் துடைத்துக் கொண்டுக் கூடத்திற்குந் போனாள்.

''இந்தா மன்னி உட்கார்! சேர்ந்து சாப்பிடலாம். பாசந்தி பிரமாதமாக இருக்கிறது'' என்றாள் சுதா!

''நீ சாப்பிடு! அவளுக்கு என்ன உபசாரம்''

அருணா மேலும் முக வாட்டத்துடன் உள்ளே போனாள்.

சுதாவிற்கு என்னவோ போல் இருந்தது, பிரித்தப் பொட்டலத்துடன் உள்ளே போனாள். அவளைப் பார்த்ததும் ''சட்'' என்றுக் கண்ணை துடைத்துக் கொண்டு சிரிக்கவும் பார்த்தாள் அருணா!

சுதா என்ன சொல்ல நினைத்தாளோ?

''சுதா! என்ன செய்கிறாயம்மா அங்கே! வா! இப்படி'' என்று அன்பொழுகக் கூப்பிட்டான்.

அருணாவின் நினைவே இல்லை போலும்!

''இந்தா மன்னி டிபன்! சாப்பிடு வரேன்'' என்ற சுதா கூடத்திற்குச் சென்றாள்.

''சுதா! உள்ளே போய் வேலை கீலை என்று செய்தாயோ எனக்கு கெட்ட கோபம் வரும்! தெரியுமா? அதற்கு என்று ஒருத்தி இருக்கிறாள் வீட்டில் நினைவிருக்கட்டும்''

அருணாவின் காதில் விழுந்தது, எல்லாம்.

விளக்கேற்றும் போது ''ஸ்வாமி உலகத்தில் எல்லோரும் பணம் காசு நகை நட்டு என்று தான் கேட்பார்கள் உன்னிடம். நான் கேட்பதெல்லாம் அவர் பழையபடி என்னிடம் அன்பாக இருக்க வேண்டும் என்பதே!

நிலையான அந்த செல்வத்தை மட்டும் கொடு எனக்கு போதும்'' என்று வேண்டிக் கொண்டாள்.

எதற்கோ கல கலவென்று சிரித்தாள் சுதா!

அடுத்த நிமிடமே ''ஏய்'' என்ற குரல் கேட்டது. ஸ்ரீதரன் தான்.

பயந்துக் கொண்டே வந்தாள் அருணா.

''நாங்கள் வெளியே போகிறோம்! வீடு பத்திரம்'' என்றான்.

''அவளும் வரட்டுமே அண்ணா'' என்றாள் சுதா

''ஒன்றும் வேண்டாம்! பேசாமல் வா'' என்றான் அதட்டலாக.

அருணா கண் கலங்க முருகன் படத்தைப் பார்த்தாள்.

கணவனிடம் மாறாத அன்புக் கொண்டிருந்த அவள் எதற்கும் அவனைத்தான் நம்பினாள்.

''பயப்படாதே! நான் இருக்கிறேன்'' என்று அந்தப் பெருமானே நேரில் வந்து சொன்ன மாதிரி இருந்தது.

மறு நாள் விடியும் முன்பு எழுந்துவிட்ட ஸ்ரீதரன் காரணம் இன்றியே சிடு சிடுத்தான். வார்த்தைகளைக் கொட்டினான். அவளை அளவு கடந்த வேதனையிலும் ஆழ்த்தினான்.

சுதாவின் கொஞ்ச நஞ்ச அமைதியும் போயிற்று

''ஐயோ அண்ணா உனக்கு என்ன வந்தது! ஏன் இப்படி மூர்க்கமாய் மாறி விட்டாய்''

''திடீர்'' என்று ஒரு சந்தேகமும் எழுந்தது அவளுக்கு.

இருவருக்குள்ளேயும் முற்றின பகையோ?

அப்படியும் நிச்சயிக்க முடியவில்லை.

அருணுதான் அவன் கிழித்தக் கோட்டையும் தாண்டுவதில்லையே! அவளா சண்டை போடுபவள்?

பொழுது போன வேகத்தில் நாட்கள்பல கடந்தன. ''சுதா புறப்படேன்! நீ இல்லாமல் வீடே பாழாகி கிடக்கிறது. எனக்கு வேலையே ஓடவில்லை. உன் நினைவாகவே இருக்கிறது சுதா''

வாரம் நான்கு கடிதம் வந்தது ராமுவிடமிருந்து. அவள் அசையவில்லை. ''இன்னும் தெரியட்டும் என் அருமை'' என்று நினைத்தாள். அதோடு அவள் மனதில் பெருங்கவலை ஒன்று உருவாகிவிட்டது. ''எப்படியாவது இவர்களை ஒன்றுசேர்த்துவிட்டுத்தான் மறு காரியம்'' எனறு உறுதி கொண்டாள்.

ஏனே அது நிறைவேறும் என்றும் தோன்றவில்லை!

விஷம் ஏறுவதைப்போல் அல்லவா அவன் துவேஷம் வளருகிறது! அருணுவின் கண்ணீரை எப்படி துடைக்கிறது.

அன்று என்ன காரணமோ அடித்தே விட்டான் அருணுவை! வலி தாங்காமல் ஒரு தரம் ''ஆ!'' என்ருள். அப்புறம் பேச்சு மூச்சு இல்லை! சுதாவிற்கு அழுகையே வந்துவிட்டது மனம் வெறுத்தும் விட்டது.

'சே! இவனோடு எவள் குடித்தனம் பண்ணுவாள். மன்னி இத்தனைக்கும் ஈடு கொடுத்துக்கொண்டு இருக்கிருளே இன்னும் இந்த வீட்டில்'' என்று நினைத்தாள்.

அதே சமயம் காரணம் இன்றித் தமையன் வீட்டில் சீராட வந்தத் தன் மதியீனத்திற்கும் வருந்தினுள், வெட்கினுள், புறப்பட்டுவிடவும் தீர்மானித்தாள்.

சொல்லத் திறன் இன்றி மறுநாள் ஆகட்டும் என்றும் இருந்துவிட்டாள். அன்றிரவு அவள் நல்ல தூக்கம் இன்றிப் புரண்டபோது அருணு படுக்கைக்கொள்ளாமல் எழுந்தாள், மெல்ல பூஜை அறையை அடைந்தாள்.

சுதாவின் மனம் புழுவாய்த் துடித்தது. எழுந்துபோய் சமாதானப்படுத்தலமா'' என்று நினைத்தாள். வராண்டா கயிற்றுக் கட்டிலில் கிடந்த ஸ்ரீதரன் '' திடீரென்று எழுந்து மெல்ல சமையிற்கட்டை நோக்கி நடப்பதைப் ''பார்த்து கப்சிப் '' என்று ஆனுள். அடுத்த சில நிமிஷங்களில் உள்ளே நடந்த பேச்சுக் குரல் தெளிவாகக் கேட்கத் தொடங்கியது.

'' சே ! அசடு ! இதென்ன அழுகை ! இப்போ என்ன ஆகிவிட்டது ? ஏதோ மனம் நொந்து வந்திருக்கிருளே ! அவள் எதிரே நாம் வழக்கம்போல் கொஞ்சிக் குலவினுல் நன்ருக இருக்குமா என்றுதான் ! தப்பா இருந்தால் மன்னித்துவிடு அருண் ! நான் கொஞ்சம் ஓவராய் தான் போய் விட்டேன்'

இல்லாவிட்டால் என்னுடன் ஒத்துழைத்திருக்க மாட்டாய்'' நீ. அவனுடைய பரந்த மார்பில் முகம் பதித்து விம்மிக் கொண்டிருந்த அருணு ''ரொம்ப சமர்த்துதான் போங்கள்', என்று சிரித்தாள் அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்து,

'' சரி போகிறேன்'' என்ற அவன் ''எங்கே அந்த கன்னத்தைக் காட்டு'' என்று குனிந்தான் உதட்டைக் குவித்துக் கொண்டே.

சுதா எல்லாவற்றையும் பார்த்து விட்டுத்தான் வந்தாள், சற்றைக்கெல்லாம் அவள் விட்டக்கண்ணீரில் தலையணையே நனையத் தொடங்கியது.

அது ஆனந்தக் கண்ணீரோ ? அன்புக் கணவனது மனம் நோக வந்த தனக்கு சரியான பாடம் கற்பித்து விட்டார்களே இருவரும் என்ற உணர்ச்சிப் பெருக்கோ !

மறுநாள் பிடிவாதமாக ரயில் ஏறி விட்ட சுதா '' மன்னியின் குணத்திற்கு மேல் இருக்க வேண்டும் தன் குணமும்'' என்று உறுதிக் கொண்டு எக்மோரில் தன் கணவனை சந்திக்கும் நேரத்தை மிக்க ஆவலுடன் எதிர்பார்க்கத் தொடங்கினுள்.


## உதயம்

### விளம்பர விகிதம்

| | |
|---|---|
| அட்டை கடைசிப் பக்கம் | ரூ. 200 |
| அட்டை உள்பக்கம் | ரூ. 175 |
| சாதாரண உள்பக்கம் | ரூ. 150 |
| ,, அரைப் பக்கம் | ரூ. 75 |
| ,, கால் பக்கம் | ரூ 40 |

விளம்பர விபரங்களுக்கு எழுதவும்:

''உதயம்''

27, ராஜகோபால் நாய்க்கன் தெரு

சென்னை-2.

தொலைபேசி : 84103

# ஏறு, மேலே ஏறு

"ஏ. மு."

புழுக்கூடு ! பொய்க்கூடு ! இவ்வு டம்போ
புலால்நாறும் நடைவீடு ! உடையும் ஓடு !
அழுக்கடைந்த ஊன்கேணி ! அழுகிப் போகும்
அங்காடிக் கடைச்சரக்கு ! எச்சில் பாண்டம் !
கழுகுநரிக் கிரையாகும் குருதிச் சோறு !
காமமதன் ஆட்சிசெயும் நடனசாலை !
இழந்துவிடும் இதைச்சதமாய் எண்ணிடாமல்
ஏறுநீ ! ஏறுநீ ! ஏறுநீ ! ஏறே !

காதல் ஒரு கானல்நீர் ! கனவு ! மாயை
கண்கட்டும் மைவித்தை ! எச்சில் இச்சை !
தீதுதரும் மனவிலங்கு ! நட்புங்கூட
சிக்கல்தரும் ஒருமுடிச்சு ! வேண்டா வேலி !
ஆதரிக்கும் உறவினரும் துன்பம் நம்மை
அணுகுங்கால் காதறுந்த ஊசி யாவர் !
ஈதெல்லாம் மெய்யென்று மதித்தி டாமல்
ஏறுநீ ! ஏறுநீ ! ஏறுநீ ! ஏறே !

செல்வம்ஒரு உருள்சகடம் ! நதிநீர் வெள்ளம் !
சிற்றிடையாள் உதட்டுறவும் வெற்று வேடம் !
எல்லாரும் 'நீபெரியன்' 'பெரியன்' என்று
எடுத்துரைக்கும் புகழும்ஒரு போதை வாதை !
பொல்லாத உலகம்இது ! மனித வாழ்க்கை
புரியாத பெரியபுதிர் ! ஆத லாலே
எல்லையில்லாப் பேரின்ப வாழ்வைக் காண
ஏறுநீ ! ஏறுநீ ! ஏறுநீ ! ஏறே !

# கூற்று ஒன்று அல்ல! ஒரு கோடி!

※ — "சித்திரை"

இன் தமிழில் எழுந்த நூல்கள், எண்ணிக் கையில் பல. மக்களை இறைவனின்பால் ஆற்றுப் படுத்தும் வாயிலாக எழுந்த நூல்களும் அவற்றின் ஊடே உண்டு.

இறைவனின் திருவிளையாடல்களை, அழகுற, பக்தி மிக எடுத்துக் காட்டி, மக்களை இறைவனின் அன்பிற்கு உரியவர்களாக வழிப் படுத்தும் நூல்களில் ஒன்று மதுரைக் கலம் பகம்.

இக்கலம்பகத்தின் பாட்டுடைத் தலைவன் மதுரையில் வீற்றிருக்கும் சொக்கலிங்க பெருமான். அவனையே தம் நாயகனுகக் கொண்டு தம்மை அவன் தன் காதலியாகக் கற்பனை செய்து எழில் ததும்ப, இலக்கிய நயம் பொலிய பாடியுள்ளார் குமரகுருபரர்.

"பொழிந்து ஒழுகும் முதுமறையின்
சுவைகண்டு புத்து அமுதம்
வழிந்து ஒழுகும் தீந்தமிழின்
மழலைச்செவி மடுத்தனையோ?"

என்று, சொக்கலிங்க பெருமானைக் கேட்கிறுர். "வேதங்களின் சுவைதனை உணர்ந்தவன் சிவன். அவன் தமிழின் இன்சுவையை மழலை மொழியெனக் கொண்டு, கேட்டு மகிழும் தன் மையன்" என்று கூறுகிறுர் இதன் மூலமாக தமிழின் மீதுள்ள அவரது தணியா காதலை வெளியிடுவது போல, மதுரைக் கலம்பகத்துப் பாட்டுடைத் தலைவனும் சொக்கர் பெருமானை, நமக்கு அறிமுகம்படுத்தியுள்ளார் புலவர்.

மதுரையம்பதியிலே சீரிய குலம் ஒன்று. அக்குலத்திற்கு மக்கட் செல்வமாம் தனி ஒருவள். அவள் சொக்கர் பெருமானின் எழில் என்று உருவம் கண்டு, அவன் மீது காதலுற்ருள். காதல் மேம்பாட்டால், வேதனையற்று தழலது கண்ட மெழுகது போல் உருகினுள், அவள். அவள் நிலை கண்டாள் அவளின் செவிலி. அவள் தன் குலத்திற்கு மருந்தான அவளின் காதல் நோயின் கொடுமை கண்டு, வேதனை மிக்குற கூறுவாள்.

"ஐயகோ! சொக்கர் பெருமானைக் கண்டு அவன் மேல் காதலுற்று மையல் நோயால் வாடும் இவளுக்கு மாற்று மருந்து கிடையாதோ? இவளை ஏற்றுக் கொண்டதன் அடையாளமாக, அப்பெருமான் தன் கொன்றை மாலையைக் கொடுத்தனுப்பமாட்டான்.

இவளை வருத்துகின்ற நமன்களோ? ஒன்றல்ல! ஒரு கோடி! என்று தான் கூற வேண்டும். நான் என்ன செய்வேன்? என்று புலம்பும் இந்நற்ச செவிலியின் கருத்தைப் பாட்டாக்கத் தருகிருர் நமக்கு, குமரகுருபரர்:

"மாற்று ஒன்று இ(ல்)லை
என் மருந்துக்கு அந்தோ?
சொக்கர் மாலை கொடார்
கூற்று ஒன்று அ(ல்)ல
ஒரு கோடி கெட்டேன்
கொழுந்து ஒன்று தென்றல்
காற்று ஒன்று இளம்
பிறைக் கீற்று ஒன்று
கார்கடல் ஒன்று கண்ணீர்
ஊற்று ஒன்று இவளுக்கு
உயிர் ஒன்று இல்லை
உண்டு உடம்பு ஒன்றுமே,"

(மதுரைக்கலம்பகம்)

இயற்கையின் நன் நலன்களான இளமை பொருந்திய தென்றல் காற்று, கரியகடல், கண்ணீர் ஊற்று இவைகள் காதல் நோயால் வாடும் இந்நங்கைக்கு பல கூற்றுவன்களாக அமைகின்றன. இதனை நோக்கியே புலவரும் அவளுக்குக் " கூற்று ஒன்று அல்ல ! ஒரு கோடி ", என்று செப்புகிறார். தெள்ளத் தெளிய.

கூற்றுவன்களோ பல. அவைகள் கொண்டு போகப்பல உயிர்கள் இல்லை, இருப்பது ஓர் உயிர்தான்.

அவள் சொக்கர் பெருமானை எண்ணி வடிக்கும் கண்ணீர் ஊற்று, பெருக ! பெருக ! அதன் வெள்ளப்பெருக்கிலே, இவள் கரைந்து விடுவாள்போல் இருக்கிறதே ! இதனால் கூறப்பட்ட நமன்களுக்கு அகப்படாது போய் விடுவாளோ! என்று அவளின் நிலையை நமக்குக் காட்டி, அவள்மீது நாம் இரக்கம் காணும்படி செய்கிறார் புலவர் தம் தீந்தமிழ்க் கவியால்.

இன்னும் ஓர் விருந்தென, நமச்சிவாயப் புலவர் காட்டும் காதலுற்ற நங்கையின் கண்ணீர் வெள்ளப்பெருக்கையும் காணுவோம் இந்நங்கையும் சொக்கர் பெருமானின் அழகிலே, தேனுண்ட கடுவன் போல மயங்கி, அவன்மீது காதலுற்றாள். அவளின் காதல் நோய்கண்ட அவளது செவிலியின் கூற்றாகக் கூறுகிறார் புலவர்,

" அடைத்தால் அடைபடச்
சொக்கே. இதுவையை
ஆறல்லவே !"

(தனிப் பாடல்)

என்று.

"முன்னம் வையையின் வெள்ளப் பெருக்கை அடைக்க, வந்தியின் ஆளாக வந்து, தலையிலே மண்சுமந்து அடைத்தாய் அவ்வெள்ளப் பெருக்கை. ஆனால் உன்மீது காதல் கொண்ட இவளின் கண்ணீர் பெருக்கை, அவ்வையை ஆற்று வெள்ளத்தை அடைத்தாற் போல அடைத்துவிட முடியாது" என்று கூறுகிறார் நயத்துடன்.

இறைவனின் பால் கொண்ட மெய்ப் பாட்டுப் பெருக்கால் எழுந்த இக்கவிகளை, 'மழலைமொழியன்ன' இளமைமிக்க தமிழின் இன்சுவையைக் கூட்டும் நன் மருந்துகளாகக் கொள்வோம்.

உதயம்

'உதயம்' ஜனவரி இதழ் பொங்கல் சிறப்பிதழாக வெளிவரும்.

சிறந்த கதைகள், பேரறிஞர் கட்டுரைகள், கவிதைகள் நிறைந்தது.

'உதயம்' ஓவியர் ஆனந்தனின் அழகிய பல வண்ண அட்டையுடன் வெளிவரும்.

விளம்பரங்கள் தந்து மலரைச் சிறப்பிக்கவேண்டுகிறோம்.

............... விவரங்களுக்கு : ...............

'உதயம்'

27, ராஜகோபால் நாயக்கன் தெரு,

சென்னை—2 தொலைபேசி : 84103



அற்புதமானது' என்று இளங்கோ நினைத்துக் கொண்டான்.

எதிர்பாராத நிலையில் தெரிந்த ஒருவரின் தொடர்பு இளங்கோவுக்குத் திடீரென்று கிட்டியது. இளங்கோவின் நிலையைக் கண்டவர் அவனைத் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றார். பத்திரிகை அலுவலகம் ஒன்றில் ஏதோ ஒரு வேலை காலி இருப்பதாகவும் அந்த இடத்தில் அவனை அமர்த்தி வைப்பதாகவும் அப்பெரியவர் நம்பிக்கை தெரிவித்தார். இரண்டொரு நாட்களில் அதற்கான ஏற்பாடுகளையும் செய்தார். உள்ளம் உடைந்து போய் இருந்த இளங்கோவுக்கு அவரது அன்பு ஆறுதல் அளித்தது.


# அனிச்சப்பூ

## 21

*புல்லரிடத்தில் போய் பொருள் தனக்குக் கையேந்தி*
*பல்லை மிகக் காட்டிப் பரக்க விழிக்கிறாண்டி!*
*பல்லை மிகக் காட்டிப் பரக்க விழிக்காமல்*
*புல்லரிடம் போகாமல்—என் கண்ணம்மா*
*பொருள் எனக்குத் தாராயோ?*

—அழுகணிச் சித்தர்.

பொழுது விடிந்தது: நண்பனிடம் சொல்லிக் கொண்டு புறப்பட்டான் இளங்கோ. எங்கே செல்வது? என்ன செய்வது? என்று அவனுக்கே தெரியவில்லை. ஊருக்குத் திரும்பிப் போக மனம் இல்லை. சென்னையிலே ஏதேனும் வேலை கிடைத்தால் இங்கேயே இருந்துவிடலாம் என்பதுதான் அவன் எண்ணம்.




'சே! என்ன வாழ்க்கை. பணம் இல்லாவிட்டால் வாழ்க்கையே நரகம்தானா? பொருளில்லாதவர்க்கு இவ்வுலகம் இல்லை என்று வள்ளுவர் கூறியது எவ்வளவு பொருத்தமானது! பொருளில்லாதவரையும் பொருளாகச் செய்வது பொருள்தானே? இன்றைய சமுதாய அமைப்பில் பொருளில்லாதவன் அலட்சியப்படுத்துகிறான். அழியும் பொருளுக்கு மனிதன் கொடுத்திருக்கும் பெருமை எவ்வளவு

அப்பெரியவர் கொடுத்த பரிந்துரைக் கடிதத்தை வாங்கிக் கொண்டு பத்திரிகை உரிமையாளரை நேரில் சந்திக்கச் சென்றான். கடிதத்தை எழுதி இளங்கோவிடம் கொடுக்கும்போதே அப்பெரியவர் ''தம்பி, அந்த முதலாளி ஒரு மாதிரியான ஆள். அவருக்கு ஏற்றபடி நடந்து பேர் எடுக்கிறது உன் பொறுப்பு'' என்று சொல்லி இருந்தார்.

அவர் குறிப்பிட்ட அந்தப் பத்திரிகை அலுவலகம் பாரிமுனையில் ஜனசந்தடி மிக்க ஒரு குறுகிய தெருவில் அமைந்திருந்தது. இடத்தைத் தேடிக் கண்டுபிடித்தான் இளங்கோ. சின்னஞ் சிறு கட்டிடம். வாசலில் ''அறத்தின் குரல்'' என்று பெயர் பொறிக்கப்பட்ட பலகை காணப்பட்டது. அதன் கீழ் ''சிறந்த குடும்பப் பத்திரிகை'' ''வார இதழ்'' என்றும் எழுதப்பட்டிருந்தன. இளங்கோ அஞ்சியவனாக மெல்ல அடிமேல் அடி எடுத்து வைத்து அக்கட்டிடத்திற்குள் நுழைந்தான்.

'டடக்...டடக்...டடக்...டடட...''

'டிரெடில்' இயங்கிக் கொண்டிருந்த சத்தம் கேட்டது. இளங்கோ தயங்கி நின்றான். ''டிரிங்...டிரிங்...'' என மைரோலர் சுற்றும் ஓசையும், ''சர்ர்...சபர்...சக்'' என மை பிளேட் எழுப்பும் சத்தமும், 'டங்...டட்டங்க்'—என

'இம்ப்ரஷன்' விழும்போது உண்டாகும் ஆரவாரமும் இளங்கோவுக்கு வேடிக்கையாக இருந்தன,

வாசலில் பெரியவர் ஒருவர் உட்கார்ந்திருந்தார். எதிரே மேஜை இருந்தது. மேஜை மீது அச்சடிக்கப்பட்ட 'பில் புக்குகள்' 'லெட்டர்'பேடுகள்', 'விசிட்டிங் கார்டுகள்', அவற்றைத் தவிர அந்த வாரத்தில் வெளிவர இருக்கும் 'அறத்தின் குரல்' பிரதிகள் அனைத்தும் காணப்பட்டன. உள்ளே நுழைந்த இளங்கோ மேஜைக்கு அருகில் உட்கார்ந்திருந்த பெரியவரிடம் கடிதத்தைக் கொடுத்துவிட்டு அமைதியாக நின்ருன். கடிதத்தைக் கையில் வாங்கிய பத்திரிகை உரிமையாளர், விரித்துப் படித்துப் பார்த்தார். பின் மேஜைமீது கற்றையாகக் கிடந்த கரன்சி நோட்டுகளை எடுத்து இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டு, மெல்ல எழுந்து சென்று எதிர்ப்புறத்துச் சுவரின் மீது மாட்டப்பட்டிருந்த இலக்குமி படத்தின் முன் சிறு சுடர்விட்டு எரிந்து கொண்டிருந்த தூங்கா மணிவிளக்கைத் தூண்டி விட்டு மீண்டும் தன்இருக்கையிலே வந்து அமர்ந்தார். அவரது முகத்தையே இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த இளங்கோ 'என்ன சொல்லப் போகிருரோ? அவரிடம் இருந்து எத்தகைய பதில் வரப்போகிறதோ?' என்று ஊகித்து அறிய முடியா தவனுகத் தவிப்புடன் நின்று கொண்டிருந்தான்.

திருவாளர். வெள்ளையப்பர்—அதுதான் அப்பத்திரிகை உரிமையாளரின்—பெயர்—சற்று அவனை ஏறிட்டு நோக்கி, மெல்லக் கனைத்துக் கொண்டே "சரி, நீ இன்று முதல் இங்கு வேலை பார்க்கலாம். உன்னைப் பற்றிய எல்லா விவரங்களையும் கடிதத்தின் மூலம் தெரிந்து கொண்டேன். உட்கார்," என்ருர்.

பின் திடீரென்று "இங்கே உனக்கு என்ன வேலை என்று தெரியுமா?" என்று கேட்டார்.

இளங்கோ "தாங்கள் கொடுப்பதை ஏற்கிறேன்" என்ருன்.

வெள்ளையப்பர் பரிவுடன் சிரித்துக் கொண்டே "நீதான் இன்று முதல் "அறத்தின் குரலுக்கு" உதவிஆசிரியர், பத்திரிக்கை நன்கு நடைபெற என்னென்ன வேலைகளுண்டோ அத்தனை வேலைகளும் உனக்குஉண்டு. நீதான் அறத்தின் குரல், அறத்தின் குரலும் நீதான்." என்று கூறிவிட்டு சற்று நேரம் அமைதியாளுர்.

நீண்டநேர அமைதிக்குப் பிறகு எதையோ நினைத்துக் கொண்டவர்போல "இதோ, பாரு ...நம்ம பிரஸ்ஸிலே இருப்பது ஒரே ஒரு ஆள் தான். அவன்தான் கம்காசிட்டர், பைண்டர், மெஷின் மேன் எல்லாம். இன்ஞெருத்தன் இருக்கான், அவன்தான் எடுபிடி வேலைக்கு, நீதான் ஒவ்வொரு வாரமும் பத்திரிகைக்கு மேட்டர் சேகரிக்கணும், புருப் திருத்தணும். வெளிவந்த பத்திரிகையை உள்ளூர், வெளியூர் ஏஜண்டுகட்கு அனுப்பணும். இதெல்லாம் சைடு பிசினஸ், மெயின் நமக்கு ஜாப் ஒர்க்கு தான், அதை உடனுக்குடன் கவனிச்சி ஒழுங்கா நடத்தணும், இந்தத் தொழில் சாதாரணத் தொழில் இல்லே, உடம்பு வளைஞ்சி உழைச்சாத்தான் கைமேல் பலன் கிடைக்கும்' என்ருர்.

இளங்கோ அன்று முதல் 'அறத்தின் குரலுக்'கு உதவியாசிரியராக ஆஞன். எழுத்துத் துறையில் அவனுக்கு ஈடுபாடு இருந்த காரணத்தால் பத்திரிகைத் தொழில் அவனுக்குப் பிடித்திருந்தது. அவன் அவ் வேலைக்கு வந்து அமரும் முன் 'அறத்தின் குரல்' பெயரளவுக்குத்தான் அறத்தின் குரலாக இருந்தது உண்மையில்—ஆபாசக் குரலாக—அநியாயக் குரலாக—வெறும் ஆர்ப்பாட்டக் குரலாக அது இருந்து வந்தது.

இளங்கோ வந்தது முதல் பத்திரிகையின் போக்கில் திடீர் மாற்றங்கள் ஏற்பட்டன. அதுவரைத் தவருமல் வந்துகொண்டிருந்த அரை நிர்வாணப் படங்களும், ஆபாசச் செய்திகளும், மஞ்சள் கதைகளும், ராசிபலன் போன்ற இதர அயிட்டங்களும் இருந்த இடம் தெரியாமல் மறைந்தன. கருத்து மிக்க கதைகளும், உணர்வுகட்கு விருந்து தரும் இனிய கவிதைகளும், ஆணித்தரமான அரசியல் விமர்சனங்களும் தொடர்ந்து வெளிவரலாயின. இப்படி ஏற்பட்ட திடீர் மாற்றத்தால் ஒரு பக்கத்தில் சர்க்குலேஷன் கொஞ்சம் 'டல்' ஆனுலும், பொது மக்களிடமிருந்து ஏராளமான வரவேற்புக் கடிதங்களும், பாராட்டுரைகளும் வந்து குவிந்தன.

வேலையில் சேர்ந்தது முதல் இளங்கோ பத்திரிகை வளர்ச்சிக்காக அல்லும் பகலும் பாடுபட்டான் எப்படி எப்படியெல்லாம் பத்திரிக்கையைக் கொண்டு வந்தால் மக்கள் மன்றத்தின் செல்வாக்கைப் பெறும் என்று திட்டமிட்டான். அவனுடைய உழைப்பாலும், ஆர்வத்தாலும் 'அறத்தின் குரல்' இலக்கிய மணம் கமழும் சிறந்த பத்திரிகையாக விரைவில் மாறியது. இளங்கோவே எல்லா வேலைகளையும் முன் நின்று கவனித்தான். விரைவிலேயே எல்லா வேலைகளையும் தானே செய்யக் கற்றுக் கொண்டான். அச்சுக் கோப்பது முதல், ஆசிரியராகப் பணிபுரிவது வரை சகலமும் அவனுகவே மாறிவிட்டான்.

பிரஸ்ஸில் இருந்த ஆள் அன்றைக்கு என்று லீவு போட்டு விட்டான். திருவாளர் வெள்ளையப்பரும் வியாபார நிமித்தமாக வெளியூர் சென்றிருந்தார். பத்திரிகையின் அடுத்த இதழ் வெளி வருவதற்கு இன்னும் இரண்டு தினங்களே இருந்தன. இளங்கோ பம்பரம் போல் சுழன்ருன், இரவில் கூட ஒரு மணி வரை வேலை செய்தான். இரண்டு பாரங்கள் அச்சாகி விட்டன, இன்னும் ஒரு பாரம் பாக்கி இருந்தது.

கடைசிப் பாரம் திருத்தியாகி விட்டது. "சரி, இதையும் கையோடே 'டிஸ்ட்ரிபூட்' போட்டுடுவோம்" என்று சொல்லிக்கொண்டே வேலையில் முனைந்தான். இளங்கோ.

இரவு மணி இரண்டு ஆகியது.

'டிரெடில்' ஓடிக் கொண்டே இருந்தது இன்னும் கூட சில பக்கங்கள் 'ஸ்டிரைக்' ஆகி முடியவில்லை.

"டடக்...டடக்...டடக்...டடக்"

கால் 'வதக்' 'வதக்' என்று பெடலை உதைக்கிறது. கைகள் பறந்து பறந்து டிரெடிலில் பேப்பரைக் கொடுப்பதும், வாங்குவதுமாக இருக்கின்றன. இளங்கோ பெருமூச்சு விட்டுக் கொண்டே வேலையில் ஈடுபட்டிருக்கிறான்.

அப்பொழுதுதான் திருவாளர் வெள்ளையப்பர் உள்ளே நுழைந்தார். ஏழெட்டு நாட்களாக ஊரில் இல்லாத முதலாளி இப்படித் திடீரென வருவார் என்று இளங்கோ எதிர் பார்க்கவில்லை. அவர் அழைத்தது கூட அவனுக்குத் காதில் விழ வில்லை. அவன் பக்கத்திலே சென்று, தோளைப் பரிவுடன் தொட்டு "இவ்வளவு நேரம் வுரையிலுமா வேலை செய்வது? உடம்பு என்னத்துக்காகும்" என்றார்.

"இல்லீங்க, இன்னும் ரெண்டு நாள்தானே இருக்கு, அடுத்த 'இஷ்யூ' வந்தாகணுமே" என்றான்.

இளங்கோவின் கடமை உணர்ச்சியைக் கண்டு உள்ளூரப் பூரித்தார் உரிமையாளர். இருப்பினும் வெளியே காட்டிக் கொள்ளாமல் "நான் இப்பதான் வந்து சேர்ந்தேன், இன்னேரத்துக்கு மேலே உள்ளே லைட்டு எரியுதே, என்று நெனச்சுதான் வந்தேன்" என்று சொல்லிவிட்டு வீட்டுக்குப் புறப்பட்டார்.

அவர் சென்ற பிறகு எஞ்சியிருந்த எல்லா வேலைகளையும் முடித்துவிட்டுக், கதவை இழுத்துச் சாத்தி உள் தாழ்ப்பாள் போட்டு விட்டுத் தன் படுக்கையை எடுத்துக் கொண்டு மேலே உள்ள மொட்டை மாடிக்குச் சென்றான் இளங்கோ. படுக்கையை விரித்துப்போட்டுப் படுத்துக் கொண்டே தான் சென்ற வார இதழில் எழுதியிருந்த கவிதையைப் பற்றியும், அதைப் பாராட்டி வாசகர்கள் கடிதம் எழுதி இருந்ததையும் நினைத்து நினைத்து மகிழ்ந்து கொண்டான். உண்மையான கலைஞனுக்கு பாராட்டைத் தவிர வேறு எதுவுமே அவ்வளவு மகிழ்ச்சி ஊட்டுவதில்லை. 'அவலமுள்' என்ற அந்தக் கவிதையில் அவன் கொட்டியிருந்த உணர்ச்சியும், உயர்ந்த சிந்தனைகளும் பலரது உள்ளத்தையும் கொள்ளை கொண்டிருந்தன.

" மயில் ஆடுகிறது—
பாராட்ட வேண்டும் என்பதற்காக அல்ல!
குயில் கூவுகிறது—
போற்ற வேண்டும் என்பதற்காக அல்ல!
அதே போல்—
என் நெஞ்சில் நிறைந்தவளே!
நீ கேட்டாலும், கோட்காவிட்டாலும்
நான் உன்னைப் பாடிக் கொண்டேதான்
இருப்பேன்!
என்னுடைய உள்ளத்தில் தைத்துவிட்ட—
அவலமுள்ளை என்னால் நீக்க முடியாது!

என்ற பொருள்பட அமைந்திருந்த அந்தக் கவிதை வாசகர்களிடத்திலே நல்ல வரவேற்பைப் பெற்றது. அவனது சிந்தனைகள் பாராட்டு என்னும் போதைக்குள் சிறிது நேரம் மயங்கிக் கிடந்தது என்றாலும்—அவனது அடிமனம் அந்தப் பாட்டிற்கு உரியவளை—எழில் மதியை—நினைத்துக் கொண்டே இருந்தது.

"எழில்மதி இப்போது எங்கிருப்பாள்? இன்னேரம் என்ன செய்து கொண்டு இருப்பாள்? எங்கிருந்தால் எனக்கென்ன? அவளைப் பற்றி நினைக்க எனக்கு என்ன உரிமை இருக்கிறது? ஊமையாக இருந்த என்னைப் பாட வைத்து விட்டுப் பாடிக் கொண்டிருந்த அந்தக் குயில் ஊமையாகி விட்டதே! உலகத்தையே தன் பொருட்டு ஏங்கவைத்துவிட்டு தான்மட்டும் எதற்கும் ஏங்காமல் அடங்கி விட்டாளே! ஆம்! அவளைப் போல் வாழ வேண்டும். நல்ல கலைஞன் தன் வாழ்க்கையிலே வெற்றி பெற வேண்டுமென்றால் அவனை உணர்ச்சி ஆளாமல், அவனே உணர்ச்சியை ஆளுதல் வேண்டும்! எழில் மதி வல்லவள்"

இளங்கோ சிந்தனை வலையை அறுத்துக் கொண்டு யதார்த்த உலகை நினைத்துப் பார்த்தான்! குடந்தையில் படித்துக் கொண்டிருந்த போது ஒரு முறை பேராசிரியர் அம்பலவாணர் வகுப்பிலே கூறிய மொழிகள் அவன் காதிலே ஒலித்தன. அவர் சொன்னார் "அன்பு என்பதும் மிக உயர்ந்த உணர்வுதான். அந்த அன்புக்கு அறிவுதான். வழிகாட்டியாக இருக்க வேண்டும். அறிவு வழிகாட்ட மறுத்து விட்டால் அன்பு என்கின்ற உணர்வுகூட பெருந் தீங்குதான் பயக்கும். எனவே அன்புக் கலத்தில் கூட அறிவின் ஆதிக்கம் இருப்பதுதான் நல்லது"

இதை நினைத்தவுடன் இளங்கோ தனக்குத்தானே கேட்டுக் கொண்டான்:- "அப்படியானால், எழில்மதியின்பால் நான் கொண்டிருக்கும் அன்பு அறிவு வழிப்படாத அன்பு தானா?..." சிந்தனையிலேயே பொழுது கழிந்தது.

⁂ ⁂ ⁂

திருவாளர் வெள்ளையப்பர் பத்திரிக்கை வரவு செலவுக் கணக்கை யெல்லாம் எடுத்துப் பார்த்தார். இரண்டு மூன்று மாதமாகப் பத்திரிக்கை விற்பனை விழுந்துபோய் இருந்தது அவருக்குப் பெரிய அதிர்ச்சியாக இருந்தது. ஆனால் பத்திரிக்கையைப் பாராட்டிக் கடிதங்கள் மட்டும் வந்து கொண்டே இருப்பதையும் பார்த்தார். வரவேற்பு இருக்கிறது; வருமானம் இல்லை முன் பெல்லாம் வருமானம் கிடைத்தது;

வரவேற்பு இல்லை. காரணம் புரியாமல் மனத்தைக் குழப்பிக் கொண்டார் வெள்ளையப்பர். கடைசியில் பத்திரிகையில் மாஸ் அட்ராக்ஷன் இல்லை என்பதைப் புரிந்து கொண்டார். ஒரு சில விசிறிகளும் அவருக்குத் தனிப்பட்ட முறையில் முன்பு போல 'அறத்தின் குரல்' ''சுவையான'' செய்திகளைத் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

வெள்ளையப்பர் இளங்கோவிடம் இது பற்றி விவாதித்தார். ''நான் சொல்றதை மனத்திலே வச்சுக்கோ, இந்தப் பத்திரிக்கைத் தொழில் வெறும் பேருக்காகமட்டும் நடத்துகிற தொழில் இல்லே மார்க்கட்டைப் புடிக்கணும், அதுதான் நம்ம லட்சியமா இருக்கணும். நல்ல 'லீடிங்'லே போயிகிட்டிருந்த நம்மபத்திரிக்கை இப்படி 'டல்'லாகக் காரணம் என்ன தெரியுமா? பத்திரிக்கை வாசகர்களுக்காகத்தான். நமக்காக நாம் பத்திரிக்கையை நடத்தக் கூடாது. மக்களின் ரசனைக்குத் தக்கபடி நாம்தான் மாறணும். மக்களை நம்ம போக்குக்கு இழுத்தால் அது முடியாது காரியம். 'ஹெவி'யான விஷயங்களைப் போடாமல் பரபரப்பூட்டும் செய்திகளைக் கவர்ச்சியாக வெளியிடணும் அரை நிர்வாணப் படங்களை பல போஸ்களில் அட்டையில் போடு. அட்டைப் படம்தான் முக்கியம். அதனாலே, பேச்சை இளங்கோ உற்றுக் கேட்டான்.

அவரே தொடர்ந்து பேசினார் :-ஆபாசமில்லையா என்று நீ என்னைக் கேட்பது போலப் பார்க்கிறே! நீ நெனைக்கிறது என்னண்ணு எனக்குத் தெரிகிறது. எது ஆபாசம்? அழகைக் காட்டுவதும், அழகை வெளிப்படுத்துவதும் எப்படி ஆபாசம் ஆக முடியும்? இதையே ஆபாசம் என்று சொன்னால், அழகைப் படைச்ச ஆண்டவனே ஆபாசமாத்தான் கருதப்படணும் உலகத்தில் அழகு இருக்கு, அழகிலே ஒரு மயக்கம் இருக்கு. அந்த மயக்கத்திலேதான் இந்த உலகத்தின் இயக்கமும் இருக்கு, இந்த மயக்கம் இல்லேண்ணா மனிதனுக்கு சந்தோஷம் ஏது? அதனாலேதான் சொல்றேன். இந்த மயக்கத்திற்குக் காரணம் இருக்கிற அழகை நாம் மக்களுக்காக வெளிப் படுத்தறோம். அப்படிப் பார்த்தா இந்தத் தொழில் ஆபாசம் இல்லே. புனிதமான தொண்டுதான்.''

வெள்ளையப்பரின் சிந்தனைச் சுடர்கள் இளங்கோவுக்கு லோகாயத வாழ்க்கையின் நுட்பங்களை எடுத்துக் காட்டின.

''வீணாகக்கவிதைகள் எல்லாம் எழுதாதே இனிக்கிற தினுசா கதைகளை எழுது. சுடச்சுட எழுது. உனக்கு இன்னும் 'மாஸ்சைக்காலஜி' புரியலே'' என்று சொல்லிவிட்டே சற்றுக் கடுமையான குரலில் ''சொன்னதைச் செய். இல்லேண்ணா நஷ்டத்துக்கு நீ தான் பொறுப்பு'' என்று தன் பேச்சுக்கு முத்தாய்ப்பு வைத்தார்.

அப்பொழுது 'அம்பாசிடர்' கார் ஒன்று வந்து நின்றது. இறங்கி வந்தவரை வெள்ளையப்பர் விழுந்துவிழுந்து உபசரித்தார். வந்தவர் பிரபல நடிகை ஹேமலதாவின் 'பர்சனல் அசிஸ்டண்ட்' என்பதை இளங்கோ பேச்சின் மூலம் அறிந்து கொண்டான்.

வெள்ளையப்பர் ஆவல் கொப்பளிக்க ''ஹேமலதா சம்மதித்து விட்டார்களா?'' என்று கேட்டார்.

''பேட்டியளிக்கச் சம்மதம்தான்! ஆனால் 'பீஸ்' விஷயத்தில் கொஞ்சம் யோசித்தார்கள். பிறகு என்னுடைய பிடிவாதத்திற்காக ரூபாய் ஆயிரத்துக்கே ஒத்துக் கொண்டார்கள், நடிகர்களின் வளர்ச்சிக்குப் பத்திரிக்கை விளம்பரமும் பலம்தானே? நாங்க உங்க வேண்டுகோளை எப்படி மறுக்க முடியும். நாளைக்கே நிருபரையோ, பத்திரிக்கை உதவி யாசிரியரையோ வரச் சொல்லுங்க. ஆனால் வருவதற்கு முன்பு 'போன்' பண்ணி விட்டு வாங்கோ'' என்றார்.

வெள்ளையப்பர் பூரண திருப்தியோடு நன்றி கூறி அவர்களை அனுப்பி வைத்தார். அவர்கள் விடை பெற்றுக் கொண்டு சென்றவுடன் இளங்கோவிடம் ''நீ நாளைக்கே ஹேமலதாவின் வீட்டுக்குப்போய் பேட்டி கண்டுவா. இந்த இஷ்யூவிலேயே அடுத்த வாரம் ஹேமலதா பேட்டி வெளி வருகிறது என்று கொட்டை எழுத்துக்களில் விளம்பரப் படுத்து. படத்தை மூன்று கலர்லே நல்ல எடுப்பாப் போடு'' என்று யோசனை கூறினார்.

அடுத்தநாள் அலுவலகத்தில் இருந்தபடியே டெலிபோன் டைரியை எடுத்துப் பார்த்து, நம்பரைக்கண்டு பிடித்து, ஹேமலதாவிற்கு 'டயல்' செய்து விட்டு ஒரு டாக்சியில் அவளைப் பார்ப்பதற்காக விரைந்தான் இளங்கோ, அவன் அவள் வீட்டை அடைந்து போர்ட்டிகோவை நெருங்கும்போது பக்கத்துத் தோட்டத்திலிருந்து ஒரு உயர்ந்த ஜாதி அல்சேஷியன் நாய் வெறிக்துக் கொண்டு ஓடி வந்தது. அதைத் துரத்திக் கொண்டே வந்த ஹேமலதா நாயை அப்படியே வாரியணைத்து தன் மார்போடு இறுகத் தழுவிக் கொண்டு இளங்கோவை நோக்கினாள். அவளது ஆச்சரியப் பேரழகில் ஒரு கணம் லயித்து நின்ற இளங்கோ தன்னுணர்வு பெற்றவனாக ''நான் நடிகை ஹேமலதாவைப் பார்க்கவேண்டும்'' என்றான்.

''ஓஹோ...நீங்கள்தான் அறத்தின் குரலா? சரி; வாருங்கள் உள்ளே போவோம்'' என அழைத்துச் சென்றாள். இங்கோ அந்த அல்சேஷியன் நாயைப் பார்த்தான். அது அவளது அணைப்புக்குள் கிடந்து மூச்சுத் திணறியது. இளங்கோ நாயை வாழ்த்தினான். ஹேமலதா இளங்கோவை அழைத்துக் கொண்டு ஒரு பெரிய ஹாலுக்குள் நுழைந்தாள் அந்தக் 'குளுகுளு' அறையில் போடப்பட்டி

ருந்த சோபாக்களும், தொங்கவிடப்பட்டிருந்த பலவண்ணத்திரைகளும், நிறுத்தப்பட்டிருந்த பெரிய பெரிய நிலைக் கண்ணாடிகளும், அவனுக்குக் கனவுலகத்தில் நுழைந்து விட்டது போன்ற பிரேமையை ஊட்டிற்று. இத்தனை பெரிய செல்வங்களும் உழைத்துத் திரட்டிய பணத்தால் கிடைத்ததா? அல்லது கறுப்புப் பணத்தால் வந்ததா? என்பதை அவனால் அனுமானிக்க முடியவில்லை.

இப்படிப் பத்திரிகை விஷயமாக இளங்கோவுக்கும்; அவளுக்கும் ஏற்பட்ட தொடர்பு காலப் போக்கில் வளர்ந்தது. உறவு தொடர்ந்தது. நாட்களும் உருண்டன. 'அறத்தின் குரல்' ஹேமலதாவின் குரலாக மாறியது. திருவாளர் வெள்ளையப்பரின் பெட்டியில் பத்திரிக்கைத் தொழிலால் கிடைத்த பணம் நிரம்பிக் கொண்டே இருந்தது. இளங்கோ அவள் வீடே கதி என்று வாழத் தொடங்கினான். அவள் மூலம் வேறுபல சினிமா நடிகைகளின் தொடர்பும் அவனுக்குக் கிடைத்தது.

ஹேமலதாவுடன் ஊர் ஊராகச் சுற்றினான். பத்திரிகைத் தொழிலில் அவனது கவனமும் குறைந்தது. கொஞ்சம் கொஞ்சமாக ஏற்பட்ட குடிப் பழக்கம் நெடிது வளர்ந்தது. குடிப்பழக்கம் வளர்ந்தது போலவே அதோடு தொத்திக் கொண்டு எலும்புருக்கி நோயும் வளர்ந்தது. 'கொக்' 'கொக்' என்று அடிக்கொரு தரம் இருமிக் கொண்டிருந்தான்,

ஹேமாவின் ஆதரவால் சினிமாவுக்குப் பாட்டெழுதும் வாய்ப்பும் இளங்கோவுக்குக் கிடைத்து, ஒரே படத்திற்குப் பாட்டெழுதிய தன் மூலம் அவனுக்குச் செல்வாக்கும், புகழும் ஒரேயடியாக வளர்ந்தன.

'அறத்தின் குரல்' சரியாக ஒலிக்கவில்லை. இடை இடையே சில வாரங்கள் பத்திரிக்கை ஒழுங்காக வரவில்லை. வெள்ளையப்பர் அவனது போக்கைக் கண்டு உள்ளூர வருந்தினார். முன்பெல்லாம் நல்லவனாக இருந்தவன் இப்படிக் கெட்டழிகிறானே என்று நொந்தார். அவன் திருந்துவதாக இல்லை. கடைசியில் ஒருநாள் இளங்கோவிடம் நேரடியாகவே "நீ நாளையிலே இருந்து இங்கே வராதே, உனக்கு இங்கு வேலை கிடையாது. நான் பத்திரிகையை நிறுத்தப் போகிறேன். நீ உன் பிழைப்புக்கு வேறு வேலை தேடிக் கொள்" என்று ரத்தினச் சுருக்கமாகக் கூறிவிட்டார். அவனுக்குச் சீட்டுக் கிழிக்கப்பட்டது.

'இனி என்ன செய்வது? சினிமாவை நம்பித்தான் பிழைக்க வேண்டும். சினிமா உலகத்தில் நமக்கே நிரந்தரமாக வாய்ப்பு கிடைக்கும் என்று எப்படி நம்புவது? வயிற்றுப் பிள்ளையை நம்பி கைப்பிள்ளையைக் கைவிட்டது போல ஆயிற்றே!' — இப்படி எல்லாம் இளங்கோ நினைத்துப் பார்க்கவில்லை. கையிலே கொஞ்சம் பணம் இருந்தது. மடியிலே கனம் இருக்கிற வரை மனத்திலே கவலை பிறக்கவில்லை.

"அன்பு வலைக்குள் அகப்பட்டுக் கொண்டு
விட்டேன்! — அந்தப்
பொன் விலங்கை அவள் எனக்குப் பூட்டி
விட்டுச் சென்றுவிட்டாள்!"

என்ற அவன் எழுதிய சினிமாப் பாடல் நாட்டின் மூலை முடுக்கெல்லாம் எதிரொலித்துக் கொண்டிருந்தது. புகழேணியின் உச்சிக்கு அவன் ஏறிக் கொண்டே இருந்தபோது, வறுமை என்னும் அதல பாதாளத்தில் மெல்ல விழுந்து கொண்டே இருந்தான்.

நாளடைவில் ஹேமலதாவின் மனமும் மாறியது. அவள் இளங்கோவிடம் காட்டிய ஈடுபாடு குறைந்தது. பிறகு என்ன? பழைய கதைதான். பசியோடும் பட்டினியோடும் சென்னையின் தெருக்களிலே இளங்கோ குறிக்கோளற்று அலைந்து கொண்டிருந்தான்.

இரவு நெடுநேரம் எங்கெங்கோ சுற்றியலைந்து விட்டு ஹேமலதாவின் வீட்டுக்குச் சென்றான். வாசலில் கூர்க்கா நின்று கொண்டிருந்தான். இளங்கோவைக் கண்ட அவன் "அம்மா, இப்பதான் மங்களாபுரம் மைனரோடு திருக்குற்றாலத்துக்குப் புறப்பட்டுப் போயிட்டாங்க. வீட்டுச் சாவி அம்மாவிடமே இருக்கு" என்று தடுத்து நிறுத்துவது போலப் பதில் கூறினான். "இன்னைக்கு மங்களாபுரம் மைனர், நேற்று நான், நாளைக்கு எவனோ" என்று சொல்லிக் கொண்டே சாலை வழியே கால் போனவாறு நடந்தான்.

அப்போது சாலை ஓரத்தில் இருந்த மரத்தடியில், பிச்சையோட்டினைக் கவிழ்த்து அதன் மீது தலைவைத்துக் கொண்டு, மல்லாக்கப் படுத்தபடியே பிச்சைக்காரன் ஒருவன் அழுகணிச் சித்தரின் பாடல் ஒன்றை வேடிக்கையான ராகத்தில் ஒப்பாரி போல் பாடிக் கொண்டிருந்தான். "புல்லர்களிடத்திலே சென்று பாழும் பொருளுக்காகப் பல்லை இளித்துக் கொண்டு நிற்கிறேனே! இந்த நிலை நீங்குமாறு இறைவா, பொருளை எனக்குக் கொடுக்க மாட்டாயா" என்ற பொருள்பட அப்பாட்டு அமைந்திருந்தது. இளங்கோ பாட்டை நன்கு ரசித்தான்.

அதே சாலையில் ஒரு கடை ஓரத்தில் மக்கள் வரிசையாகப் படுத்துத் தூக்கிக் கொண்டிருப்பதையும் கண்டான். அது அரிசிக் கடை என்றும், மறுநாட் காலை கடை திறந்ததும், அரிசி வாங்க கியூவில் நிற்கும் பொருட்டுத்தான் இரவிலேயே இங்கு பையோடு வந்து படுத்துக் கிடக்கிறார்கள் என்றும் அவன் ஊகித்து அறிந்து கொண்டான்.

'இவர்களைப் போன்றவர்களின் பசியும், நோயும் தீர வழியே இல்லையா? பசியாலும், பட்டினியாலும் வாடுகின்ற மக்கள் தலைமுறை தலைமுறையாக உலகத்தில் இருந்துகொண்டே தான் இருப்பார்களா? இவர்களது இருண்ட வாழ்வில் என்றைக்கு ஒளி பிறக்கும்? இவர்களது இருண்ட வாழ்வில் என்றைக்கு ஒளி

பிறக்கும்? இவர்களது குவிந்த வயிறுகளில் என்றைக்கு சோறு நிறையும்?''

இளங்கோவின் மனக் குமறல் எழுந்து தணிந்தது. அப்போதுதான் ஊரிலே இருக்கும் தன் தாயின் நினைவும், தங்கை திலகத்தைப் பற்றிய எண்ணமும் மனத்திலே அரும்பின, 'ஐயோ, நான் எவ்வளவு பாவி, ஈன்றெடுத்த தாயும், உடன் பிறந்த தங்கையையும் கவனிக்காமல், இங்கே வந்து இப்படிக் கெட்டழிகிறேனே! எதை எதையோ கண்டு, அதையெல்லாம் பற்றுக் கோடாக நினைத்து வீண் மயக்கத்திலேயே நாட்களை ஓட்டுகின்றேனே, எனக்கு உய்வுண்டா?' இளங்கோ தன்னையே நொந்து கொண்டான். பாகனின் கடிவாளப் பிடிக்கு அடங்காமல் கட்டற்று ஓடும் காட்டுக் குதிரையைப் போல அவனது அறிவும் உணர்ச்சியும் இலக்கு இன்றி எங்கெங்கேயோ அலைந்து கொண்டிருந்தன.

# 22

*குற்றமெல்லாம் குணமாகப் பாங்கிமாரே!*
*—கொள்ளும்*
*கொற்றவர்என் கொழுனர் காணீர்*
*பாங்கிமாரே!*
*குற்றமொன்றும் செய்தறியேன் பாங்கிமாரே!*
*—என்னைக்*
*கொண்டு குலம் பேசுவாரோ*
*பாங்கிமாரே!*

—இராமலிங்க அடிகள்.

பின் பனிக்காலம் முடிந்தது; இளவேனில் வந்தது. அதுவும் கழிந்து முதுவேனில் பிறந்தது. பருவங்கள் மாறிக் கொண்டே இருந்தன, எழில் மதியின் வாழ்க்கையிலும் எத்தனையோ மாற்றங்கள் நிகழ்ந்தன.

குடந்தையிலே படிப்பை முடித்துக் கொண்டு சென்னைக்கு வந்து சேர்ந்தாள். சென்னையிலும் படிப்பு தொடர்ந்தது. மெய்யப்பர் திருவல்லிக்கேணியில் ஒரு நல்ல வீட்டை அமர்த்தி மகள் படிப்பதற்கு வேண்டிய அத்தனை ஏற்பாடுகளையும் செய்து முடித்தார்.

எழில்மதி எதிலுமே பற்றற்றவள் ஆனாள். தான் பெரிதும் விழைந்து பயின்று வந்த இசைக்கலைக்கும் ஒரு முழுக்குப் போட்டாள், பெறற்கரும் ஒன்றைப் பெற்று இழந்து விட்ட சோகமே அவள் முகத்தில் கவிந்து இருந்தது. நந்தன் சிறைக்குச் சென்ற பிறகு அவள் வாழ்வே மாறிவிட்டது. அவனைப் பற்றியும் ஒன்றும் தெரியவில்லை. திருச்சி மத்திய சிறையிலிருந்து வடக்கே பெல்லாரிக்கு மாற்றி இருக்கிறார்கள் என்ற செய்தி மட்டும் காதில் விழுந்தது. இனிமையாகச் சென்று கொண்டிருந்த தன் வாழ்வில் எதிர்பாராமல் நிகழ்ந்து விட்ட ஏமாற்றத்தால் அவள் நடைப் பிணமாக மாறினாள். இருப்பினும் தன் வாழ்விலே மலர்ச்சி ஏற்படும் என்ற நம்பிக்கையில் நாட்களை ஓட்டி வந்தாள்.

''நான் மனமார எந்தக் குற்றத்தையும் செய்யவில்லை. உள்ளத்தில் அழுக்கு இல்லா நாம் ஒன்றை நேசித்தோம். ஆனால் அது இன்றில்லாவிட்டாலும் நாளை நமக்குக் கிட்டாமல் போகாது. நந்தன் நல்லவர். குற்றத்தையும் குணமாகக் கொள்பவர். குற்றமற்ற என்னை அவர் ஏற்றுக் கொள்ளாமல் இருக்கமாட்டார்'' என்று எழில்மதி மனமார நம்பினாள். இதே பொருள்பட நாயக நாயகி பாவத்தோடு இராமலிங்க அடிகள் பாடி இருக்கும் 'குற்றமெல்லாம் குணமாகப் பாங்கிமாரே'' என்ற பாடல் வரிகளை அவள் பாடுவது வழக்கம்.

மனத்திலே இருந்த வேதனைகள் பிறரோடு பழகப் பழகத் தேய்ந்து போய் விடுவது போல அவள் உணர்ந்தாள். சென்னைக் கல்லூரியில் புதிய தோழிகளின் பரிவிலும், அன்பிலும் தன் வேதனைகளை மறந்து இருந்தாள். குடந்தையில் தன்னோடு உயிருக்கு உயிராகப் பழகிய வசந்தியின் நினைவு மட்டும் அடிக்கடி வரும். அவளும் வாரத்திற்கு ஒரு முறை தவறாமல் கடிதம் எழுதிக் கொண்டிருந்தாள்.

எழில்மதி, வசந்தி எழுதியிருந்த கடிதத்திற்குப் பதில் எழுதிக் கொண்டிருந்தாள். அத்தை கூட்டத்திலே அமர்ந்து கோதுமையை முறத்தில் கொட்டிப் புடைத்துக் கொண்டிருந்தாள்,

பதில் எழுதி முடித்தவுடன் பக்கத்தில் இருந்த வானொலிப் பெட்டியைத் திருப்பினாள்.

'' அன்பு வலைக்குள் அகப்பட்டுக்
கொண்டுவிட்டேன்!
பெண்விலங்கை அவள் எனக்குப்
போட்டுவிட்டுச் சென்றுவிட்டாள் ''

என்ற திரைப்பாடல் ஒலித்தது. அப்பொழுது தான் சென்னையிலே திரையிடப்பட்டு வெற்றி முரசு கொட்டிக் கொண்டிருந்த படத்திலே வருகின்ற பாடல் அது. அந்த பாடலைக் கேட்பதற்காகவே எழில்மதி அந்தப் படத்திற்கு இருமுறை சென்றாள். அதே பாட்டை அவளும் ஈடுபட்டுப் பாடினாள். பாடிய பின் 'அன்பும் ஒரு வலைதான்; பூட்டப்படுகின்ற பொன் விலங்குதான்'' என்று வாய்விட்டுச் சொல்லிக் கொண்டாள்.

அப்பொழுது உள்ளே இருந்து வந்த அத்தை ''ஏண்டியம்மா...உனக்கென்ன சித்தபேதமா?...பைத்தியக்காரி மாதிரி நீயே உனக்குள்ளேயே பேசிக் கொள்றியே?......ஏது ..வர வர உனக்கு இந்த வியாதி முத்திப் போச்சே'' என்று விளையாட்டாகவும் சற்று வினயமாகவும் கேட்டுவிட்டுத் தன் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

பாட்டில் ஈடுபட்டிருந்த எழில்மதி ஏதோ நினைத்துக் கொண்டவள் போல அத்தையிடம்

சொல்லிக் கொண்டு கடற்கரைப் பக்கம் சென்றாள். வழக்கமாக உட்காருகின்ற இடத்தில் தோழியர்கள் தனக்காகக் காத்துக்கொண்டிருப்பார்கள் என்று எண்ணினாள். எழில் மதி கடற்கரைக்குச் சென்று வழக்கமாக எந்த இடத்தில் தன் தோழியருடன் உட்கார்ந்திருப்பாளோ அந்த இடத்தில் சென்று அமர்ந்தாள். அப்பொழுதுதான் எதிர்பாரத அந்த நிகழ்ச்சி நடந்தது.

''கொக்'' ''கொக்'' என்று இருமிக் கொண்டே ஒரு எலும்புக் கூடு நடைபயின்று வருவது போல வந்துகொண்டிருந்தான் இளங்கோ. திடுக்கிட்டுத் திரும்பிய எழில்மதி அவனை ஏறிட்டு நோக்கினாள். எங்கேயோ பார்த்திருப்பது போன்ற உணர்வு எழுந்தது. அவனும் அவளை நோக்கினான்.

''எழில்மதி...நீங்களா? இங்கு எப்படி வந்தீர்கள்? என்னைத் தெரிகிறதா...நான்தான் இளங்கோ.''

எதிர்பாராத நிலையில் எழில்மதியை அந்த இடத்தில் சந்தித்த வியப்பினாலும், தன் நெஞ்சில் பரிபூரணமாக நிறைந்திருக்கும் அவளை நெடுநாட்களுக்குப் பின் பார்க்க வாய்ப்பு கிடைத்த மகிழ்ச்சியாலும் அவன் கொஞ்ச நேரம் எதுவுமே பேசமுடியாதவனாகத் திணறினான். அந்த மகிழ்ச்சிப் பூரிப்பில் அவனது கண்களில் கண்ணீர் முத்துக்கள் திரண்டு வழிகின்ற நிலையிலே நின்று கொண்டிருந்தன.

''வணக்கம் இளங்கோ......உங்கள் உடம்புக்கு என்ன? ஏன் இப்படி அடையாளம் தெரியாமல் ஆகிவிட்டீர்கள்?'' என்று கேட்டாள் அவள்.

''வேண்டாம் எழில்மதி...இந்த இளங்கோவின் துர்ப்பாக்கிய வாழ்க்கையை நீங்கள் தெரிந்து கொள்ளவே வேண்டாம் உன்னைப் பார்க்கும் வாய்ப்பு கிட்டியமைக்கு மகிழ்கிறேன். நான் உன்னோடு இந்த நிலையில் இங்கு நின்று சில பேசுவதற்கு என்னை அனுமதிப்பாயா?''

'' உங்களைப் பார்த்தால் ஏதோ நெருக்கடியான துன்பத்தில் இருப்பதாகத் தெரிகிறது. மனமிருந்தால் உங்கள் துன்பத்தை மனம் விட்டுச் சொல்லுங்கள். என்னால் தங்களுக்கு உதவ முடியுமாயின்...''

அவன் மணற் பரப்பில் கையை ஊன்றிக் கொண்டு உட்கார்ந்தான். அவளும் அமர்ந்தாள். இளங்கோ வானத்தையே வெறித்து நோக்கிக் கொண்டிருந்தான். எந்தப் பெண்ணின் முகத்தைத் தன் வாழ்நாள் பூராவும் கண்டு மகிழ்ந்து கொண்டே இருக்கவேண்டும் என்று நினைத்தானோ அதே பெண் இன்று தன் பார்வைக்கு எதிரேயே இருக்கின்ற போது நேரே பார்க்கத்திராணியற்றவனாக எங்கேயோ நோக்கிக் கொண்டிருந்தான்.

அப்பொழுது கடற்கரை ஓரமாகச் சென்று கொண்டிருந்த இளம் தம்பதிகள் இருவர் 'டிரான்சிஸ்டரைக் கையில் எடுத்துச் சென்றனர். அதிலிருந்து புறப்பட்ட,

'' அன்பு வலைக்குள் அகப்பட்டுக்
கொண்டு விட்டேன்''

என்ற பாட்டு அலை அலையாக எழுந்து காற்றிலே கலந்தது. இளங்கோவின் உடல்அப்பாட்டொலி கேட்டு சிலிர்த்தது.

''இளங்கோ, அந்தப் பாட்டு எவ்வளவு உருக்கமான பாடல்!'' என்றாள் உணர்ச்சி பொங்க.

''பாட்டைக்கேட்கின்ற நமக்கே இவ்வளவு உருக்கம் பிறந்தால் அந்தப் பாட்டைப் படைத்தவன் எவ்வளவு மனம் உருகி இருக்க வேண்டும்''என்றான் இளங்கோ. அப்பாட்டை எழுதியவன் இளங்கோதான் என்பது எழில் மதிக்கு எப்படித் தெரியும்?

''ஆமாம் பாட்டை எழுதியவன் உணர்ந்து தான் எழுதியிருக்க வேண்டும்''

''அப்பாட்டை எழுதியவனும், அந்தப் பாடல் எழுதப்படுவதற்குக் காரணமாக இருந்தவளும் திடீரென்று சந்தித்தால் எப்படி இருக்கும்?'' அவள் அமைதியாக இருந்தாள். இளங்கோ கேட்ட கேள்வியின் உட்பொருள் அவளுக்குப் புரியவில்லை.

''அப்பாட்டை எழுதியவனும், அந்தப் பாட்டை உருவாக்கிக் கொடுத்தவளும் யார் என்று உனக்குத் தெரியுமா?''

''யார்?''

''நாம் தான்''

அவள் திடுக்கிட்டாள்! ''நாம்'' என்று குறிப்பிட்டால்''...!?

''எழில்மதி, என்னை மன்னித்துக் கொள். உன் நினைவுகள்தான் என்னைக் கவிஞன் ஆக்கின. நீ என்னுள்ளே நீக்கமற நிறைந்து விட்டாய். நானே அந்த அன்பு என்கிற பொன் விலங்குக்குள் அடிமையாகி விட்டேன். நீ என் அன்பை ஏற்றுக்கொண்டாலும், ஏற்றுக் கொள்ளா விட்டாலும் என் உள்ளம் உன்னையே நாடிக் கொண்டிருக்கும்.

அவன் கூறிய சொற்களைக் கொண்டே அவனது பழைய வரலாற்றையும், தற்போதைய நிலையையும் அவள் அறிந்துகொண்டாள். படிப்பை விட்டு விட்டு, குடந்தையிலிருந்து வெளியேறிய பிறகு அவன் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றத்தை எல்லாம் இளங்கோ உருக்கமாக எடுத்துரைத்தான். அவனது கண்ணீர்க் கதையைக் கேட்ட எழில்மதி நெஞ்சம் நெகிழ்ந்தாள்.

'' இளங்கோ! உங்கள் அன்பை நான் உணர்ந்திருக்கிறேன், நீங்கள் எந்தவிதமான

அன்பை என்னிடமிருந்து எதிர்பார்க்கிறீர்களோ அதை நான் உங்களுககுக் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறேன். அந்த அன்பை இன்னொருவருக்கு என்று அர்ப்பணித்து விட்ட பிறகு அத்தகைய அன்பை நான் உங்களுக்கு எப்படிக் கொடுக்க முடியும். ஆனால் எனக்கும் பொதுவான கருணை உண்டு. அந்தக் கருணையை—அனுதாபத்தை—அதை மட்டும்தான் — உங்களுக்குக் கொடுக்க முடியும் ?''

''அன்பில்லாத உன்னிடத்தில் எப்படி கருணை உருவாக முடியும் ?!]

''நீங்கள் எந்த ஒன்றை என்னிடம் எதிர்பார்க்கிறீர்களோ அது ஒருவருக்கு மட்டும் தான் உரிமையாக இருக்க முடியும். குறிப்பிட்ட ஒருவரால் அங்கிகரிக்கப்பட்டு விட்ட அந்த அன்பை இன்னொருவர் பகிர்ந்து கொள்ள முடியாது. நான் குறிப்பிடுவது மனிதன் ஒவ்வொருவனுக்கும் இயல்பாக அமைந்திருக்கின்ற பொதுவான இரக்கத்தைத்தான்.''

''நீ என்னை அவமதித்திருக்கிறாய்! என் அன்பின் ஆழத்தை நீ உணரவில்லை''

''தவறு. நீங்கள்தான் என்னைப் புரிந்து கொள்ளவில்லை. நான் உங்களை அவமதிப்பதாக இருந்தால் என்றைக்கோ அலட்சியப் படுத்தி இருப்பேன். உங்களிடத்தில் எனக்கும் அன்பு, மதிப்பு, என்று இருப்பதால்தான் நீங்கள் என்னோடு பேசுவதற்கு அனுமதிக்கிறேன். இளங்கோ. நீங்களே எண்ணிப் பாருங்கள். ஒரு ஆண் ஒரு பெண்ணிடத்தில் அன்பு காட்ட வேண்டும் என்றால் அது உடல் அளவிலும் இருக்கத்தான் வேண்டும் என்று கருதுகின்றீர்களா ? ஒருத்தியை அன்பு காட்டி கௌரவிக்க நினைத்தால் வெறும் இழிந்த உடம்பினை நாம் ஒதுக்கித் தள்ளி மறக்க முடியாதா ? கணவன் மனைவி என்ற முறையில் வாழும் வாழ்வைவிட உண்மையான அன்பு நம்முடைய உடம்புக்கு அப்பால்தான் இருக்கிறது. உடம்பொடு பட்ட அன்பெல்லாம் மெய்யாய்த் தோன்றி பொய்யாய் முடிந்து போகக் கூடியவை. அழியும் உடம்பையே அழியாத அன்பின் கொள்கலமாக தாம் நினைத்தால் பொய்யையே மெய்யென்று நம்பிய பேதமை போலத்தான். அப்பாலுக் கப்பாலாய் விளங்கும் உள்ளத்தின் நெகிழ்ச்சிதான்—உணர்வுகளின் ஒருமைப்பாடு தான்... தூய்மையானது; பெருமைக்குரியது. யுகயுகாந்திரமாகக் காவியங்களிலும், கதைகளிலும் போற்றிப் புகழப் படுகிறது. இளங்கோ, உங்கள் அன்புக்கு என் பணிவான நன்றி''

''எந்த உள்ளம் உனக்காக ஏங்கித் தவிக்கிறதோ, அந்த உள்ளம் உன் காரணமாகவே அவலப் படுகுழியில் தள்ளப்பட்டு விட்டதோ, அதே உள்ளத்திற்கு நீ அமைதியோடு பாராட்டுத் தெரிவிக்கிறாயே? அது உன்னால் எப்படி முடிகிறது ?''

''உங்கள் உள்ளத்தின் வேதனைக்கு நான் எந்த வகையிலும் காரணமாக இல்லை. உள்ளத்தின் செம்மை அவரவர்களைப் பொறுத்தது.''

''அப்படியானால் உன் நினைவிலேயே நான் ஏங்கி மடிய வேண்டுமா ? இது தான் உன் விருப்பமா ? இதுதான் நீ எனக்குக் கொடுக்கும் தண்டனையா ?''

''ஏன் இப்படி விபரீதமாகப் பேசுகிறீர்கள் உங்களைத் தண்டிக்க நான் யார் ?''

''எழில்மதி... உன்னிடத்திலே அடைக்கலமாகி விட்ட என் நெஞ்சத்தை இனி என்னால் மீட்டுக் கொள்ள முடியாது. இந்த ஏழைக் கவிஞனின் உயிர் இறக்கும் போதும் உன்னைத்தான் நினைத்துக் கொண்டிருக்கும். உன்னுடைய மடியில் தான் என்னுடைய உயிரும் என்னை விட்டுப் பிரியும். அது அடுத்தபிறவியிலும் உன்னைத்தான் தொடர்ந்து கொண்டு இருக்கும். இது என் வேட்கை மட்டுமல்ல. நான காணும் தீர்க்க தரிசனம். என் மனத்தடத்திலே பிரதிபலிக்கும் எதிர் நிலைக் காட்சி'' இளங்கோ உணர்ச்சி வயப் பட்டுப் பேசினான். பேசும் போது அவன் உடல் குலுங்கியது. பெருமூச்சு எழுந்தது.

''இளங்கோ, வெளிப்படையாகவே சொல்கிறேன். நான் என்னையே நந்தனுக்கு ஆத்மநிவேதனம் செய்து விட்டேன். இனியும் நீங்கள் என்னையே நினைத்துக் கொண்டிருந்தால் அது நீங்கள் உங்கள் நண்பனுக்குச் செய்யக் கூடிய துரோகமாகத்தான் இருக்க முடியும்.''

எழில்மதியின் வாசகங்கள் குத்தீட்டியைப் போல இளங்கோவின் நெஞ்சில் பாய்ந்தன.

அவனது உணர்வுகள் அடங்கின. அறிவு விழித்தது.

''என்னை மன்னித்து விடு எழில்மதி. ஏங்கித் தவிப்பது என்னோடு இருக்கட்டும். உங்கள் காதல் வாழ்வில் நான் இனி குறுக்கிடவே மாட்டேன். நீதான் எனது தெய்வம். நீ என் வழிபாட்டிற்குரியவள். உன் வாழ்க்கை மலருமாக! நான் வருகிறேன்'' என்று உணர்ச்சி வயப்பட்டவனாகக் கூறி மெல்லத் தலை குனிந்து அவளது பாதங்களைத் தொட்டு வணங்குபவனைப் போல... தலை தாழ்த்தி எழுந்து, அவளது மறு மொழிக்குக் காத்திராமல் வேகமாக நடந்தான்.


நெஞ்சு கலங்கிய எழில்மதி தன் பலம் கொண்ட மட்டும் ''இளங்கோ'' என்று கத்தினாள்.


அவள் குரல் அவன் செவிகளில் விழவில்லை.

(தொடரும்)

Published by Sakunthala Krishnan, 27, Rajagopal Naicken St., Chintadripet, Madras-2, Printed by R. Rav at Sudar Printers, 33, Jones Street, Madras-1. Acting Editor: Sakunthalakrishnan Founder: Kannikannan

# மகிழ்ச்சிகரமான
# பொங்கல்
# வாழ்த்துக்கள்





பன்னெடுங்காலமாய்
மங்காப்புகழ்
படைத்த
நெசவாளர்கள்

## தமிழ் நாடு
## கைத்தறி
## நெசவாளர்
## கூட்டுறவு
## சங்கம்
## லிமிடெட்.

பாலசுந்தரம் பில்டிங்ஸ்
எழும்பூர், சென்னை-8


**கோ-ஆப்டெக்ஸ்**
**கைத்தறி**
**துணிகள்**

ELEGANT

இப்பொழுது நடைபெறுகிறது

சென்னை : வெலிங்டன், ராக்ஸி, ஸ்ரீ முருகன்

மற்றும் தென்னுடெங்கும்




ஏவிஎம் புரொடக்ஷன்ஸ்

# சர்வர் சுந்தரம்

AVM PRODUCTIONS

டைரக்ஷன் கிருஷ்ணன் பஞ்சு

இசை விஸ்வநாதன் ராமமூர்த்தி. பாடல்கள் கண்ணதாசன். கதை-வசனம் K.பாலசந்தர். காமிரா S.மாருதிராவ். தயாரிப்பு குகன் பிலிம்ஸ்